வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 19.08.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 255 | பக்கங்கள் : 16






## கிளிநொச்சி தொழில்நுட்ப பீடத்துக்கு நேற்று புதிய கட்டடம் திறந்துவைப்பு

கிளிநொச்சி, ஓக. 19

கிளிநொச்சி - அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக தொழில் நுட்ப பீடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் நேற்று காலை 10 மணியளவில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

15

## ஜப்பான் செல்கிறார் ரணில்

கொழும்பு, ஓக.19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் மாதம் ஜப்பான் செல்லவுள்ளார். இந்த பயணத்தில், ஜனாதிபதி, ஜப்பான் பிரதமருடன் கலந்துரையாடுவார். இதன்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது என்று தெரியவருகிறது. (அ)

# பொருளாதார நெருக்கடியினால் மிக ஆபத்தில் இலங்கை மக்கள்!

### அவசர நடவடிக்கையை கோருகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, ஓக. 19

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மில்லியன் கணக்கான மக்களை வறுமையில் தள்ளியுள்ளது. அத்துடன் சுகாதாரம், கல்வி மற்றும் போதுமான வாழ்க்கைத்தரத்துக்கான அவர்களின் உரிமைகளைப் பாதிக்கிறது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் புதிய சமூகப் பாதுகாப்பு முறையை நிறுவுவதற்கும் கடன் நிவாரணத்தைப்

15



## யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் எதிர்ப்புப் போராட்டம்!

கிளிநொச்சி, ஓக..19

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் தொழில்நுட்ப பீடத்தின் புதிய கட்டட திறப்பு விழா நிகழ்வில் எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் தொழில்நுட்ப பீடத்தின் புதிய கட்டடம்

15

# சீன கப்பலை கண்காணிக்க இந்தியாவுக்கு அமெ. உதவி!

### அம்பாந்தோட்டை வான்பரப்புக்கு 2 இராணுவ செயற்கைக்கோள்கள்



கொழும்பு, ஓக. 19

**அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு சீன ஆய்வுக் கப்பல் வந்துள்ள நிலையில், குறித்த கப்பலை கண்காணிக்க அமெரிக்க அரசு உயர் தொழில்நுட்ப கருவிகளை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இந்த சாதனங்கள் என்ன என்பதை அமெரிக்கா வெளியிடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக இரண்டு அமெரிக்க இரா

15

## சஜித்தின் சகாக்கள் 20 பேர் அரசுடன் இணையத் திட்டம்!

கொழும்பு, ஓக. 19

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட 20 பேர் விரைவில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரியப்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

15

## 4 ஆம் திகதி மலர்கிறது புதியதொரு கூட்டணி!

### தலைவராகின்றார் விமல்

கொழும்பு, ஓக. 19

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியிலிருந்து வெளியேறிய பங்காளிக் கட்சிகள் இணைந்து, உருவாக்கியுள்ள புதிய அரசியல் கூட்டணியின் பெயர், கொள்கைத் திட்டம் என்பன எதிர்வரும் 04 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

இதற்கான

15

## நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இம்மாத இறுதியில் இலங்கைக்கு

### மத்திய வங்கி ஆளுநர் தகவல்

கொழும்பு, ஓக. 19

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இம்மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இலங்கை வரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அத

15

## அடுத்த வாரமளவில் புதிய அமைச்சரவை?

கொழும்பு, ஓக. 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக அமைச்சரவைக்கு பதிலாக, அடுத்த வாரம் புதிய அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளது என அரச வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து அரசியல் கட்சிகளுட

15

## யாழ்ப்பாணம் வந்தார் அமைச்சர் சுசில் கல்விப் பிரச்னைகள் குறித்து ஆராய்வு



யாழ்ப்பாணம், ஓக.19

யாழ். மாவட்ட கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்னைகளை அடையாளம் கண்டு, அவை தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் வகையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கல்வி அமைச்சர் சுசில் பிரேம

15

## வீடு திரும்பினார் இரா. சம்பந்தன்!

கொழும்பு, ஓக. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் 8 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில்

15

## பல்கலை. மாணவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்

### வசந்த உட்பட 12 பேர் கைது

கொழும்பு, ஓக. 19

அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர்மீது பொலிஸார் கண்ணீர் புகை வீசி தாக்கியதுடன், நீர்தாரைப் பிரயோகமும் செய்யப்பட்டது. அத்துடன், ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உள்பட 12 பேர் பொலிஸாரால் துரத்திப் பிடிக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டனர்.

15

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு ஊரில் ஓர் ஆசிரியர் இருந்தார். அவருக்கு மதிய உணவிற்குப் பிறகு சற்று நேரம் தூங்காமல் இருக்க முடியாது. மாணவர்களைப் பாடம் படிக்கச் சொல்லிவிட்டு அவர் வகுப்பறையிலேயே சற்று நேரம் தூங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

மாணவர்கள் அவரைக் கேலி செய்வார்கள். ஏன் இப்படி வகுப்பில் தூங்குகிறீர்கள் என்று கேட்பார்கள்.

அதற்கு அவர் திறமையாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு, தான் தினமும் கனவுலகிற்குச் சென்று வருவதாகவும், அங்கே பல பண்டைய காலத்து ஞானிகளை சந்தித்து வருவதாகவும் கூறுவார்.

ஒருநாள் ஆசிரியர் வகுப்புக்குள் நுழையும் நேரம் பார்த்து அனைத்து மாணவர்களும் தூங்குவது போல் மேசையில் படுத்துக் கிடந்தார்கள். திடுக்கிட்ட ஆசிரியர், பிரம்பால் அனைவரையும் தட்டி எழுப்பித் திட்டினார். ஏன் வகுப்பில் தூங்கினீர்கள் என்று கேட்டார்.

மாணவர்கள் ஒரே குரலில் சொன்னார்கள் ‘கனவுலகிற்குத் நாங்களும் ஞானிகளைப் பார்க்கச் சென்றிருந்தோம் சேர்’.

யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற ஒவ்வொரு விடயங்களும், அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற ஒவ்வொரு செய்திகளும் அதிர்ச்சியளிப்பதாக இருக்கின்றன.

‘ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றிக்கொண்டதால் பூசகர் ஒருவர் உயிரிழந்தார். அத்தோடு ஊசி மூலம் போதை ஏற்றிக்கொண்டதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.’

‘யாழ்ப்பாணத்தில் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.’

‘மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது.’

இவையே அண்மைக்காலத்தில் யாழப்பாணத்திலிருந்து கிடைக்கின்ற செய்திகள்.

வழக்கம்போல அவை எல்லாவற்றிற்கும் இனவாத சாயம் பூசிவிட்டு நகர்ந்து சொன்று கொண்டிருக்கின்றார்கள் நமது தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள்.

மாணவர்கள் மத்தியில் இந்த போதைப் பழக்கத்தை ஒழிக்க, முறையான திட்டமிடலுடன் அதுதொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த எந்த முயற்சியும் இதுவரை எடுக்கப்படவில்லை.

தற்கொலைகள் அதிகரிப்பு எதனால் நடக்கின்றது என்பதற்கு ஒரு முறையான ஆய்வுகள் இதுவரை செய்யப்படவில்லை.

தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்த யாரும் இதுவரை முயன்றதாக தெரியவில்லை. அவ்வப்போது மருத்துவர் யமுனானந்தா போன்ற சிலர் சில கட்டுரைகளை எழுதுவதோடு முடிந்துபோய்விடுகின்றது.

மிக அற்ப விடயங்களுக்கே உயிரை மாய்த்துக்கொள்ள, இதுபோன்ற தவறான முடிவுகளை எடுப்பது அதிகரிப்பதற்கு எதிராக உடனடியாக விழிப்புணர்வு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் என்பது யாழ்ப்பாணத்தின் கலாச்சார அடையாளம். பாடசாலையில் கல்விகற்கும் போதே மாணவர்களின் கனவு எல்லாமே பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்துவிடவேண்டும் என்பதுதான்.

ஒருவர் எந்தத் துறையில் பணியாற்றினாலும் அவரது கனவு என்பது அந்தத் துறையில் உள்ள அதி உயர் பதவியை பெற்றுவிடவேண்டும் என்பதுதான். அதேபோல மாணவர்களின் முதலாவது இலக்கு பல்கலைக்கழம் நுழைவதுதான்.

அத்தகைய பெருமையையும் சிறப்பையும் பெற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தொடர்பாக நேற்றுமுன்தினம் வெளிவந்த பரபரப்பான செய்தியே சமூகவலைத்தளங்களில் முக்கிய இடத்தைப்பெற்றிருந்தது.

ஒரு பேராசிரியர் தற்கொலைக்கு முயன்றதாக வெளிவந்த அந்தச் செய்தி பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கலாம்.

துறைத் தலைவராக நியமிக்கப்படவிருந்த ஒரு பேராசிரியர் தனக்கு அவ்வாறு நியமனம் கிடைக்கவில்லை அல்லது தாமதப்படுத்தப்படுகின்றது என்பதற்காக மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு தற்கொலைக்கு முயன்றதாக வெளிவந்த செய்தியை இன்னமும் ஜீரணிக்க முடியவில்லை.

இந்த ஊர்க்குருவியுடன் கல்விப் பொது தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய சக மாணவன் ஒருவன் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதற்காக உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் ஒன்றுதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

பரீட்சையில் சித்தியடைவேன் என்று முழு நம்பிக்கையில் இருந்த அவன், அந்த நம்பிக்கை வீண் போனபோது அதனை தாங்கிக் கொள்ள முடியாமல் தவறான அந்த முடிவை எடுத்திருந்தான்.

ஆனால் ஒரு பல்கலைக்கழகத்தில், அதுவும் பேராசியராக ஆகும் அளவிற்கு உயர்ந்த ஒருவரால், தனக்கு கிடைக்க வேண்டிய ஒரு பதவி உயர்வுக்காக தற்கொலைசெய்ய முயன்றார் என்றால், எமது கல்விப் பாரம்பரியம், ஆசிரியப் பாரம்பரியம் எப்படி இருக்கின்றது என்பதற்கு விளக்கம் தேவையில்லை.

மேலேயுள்ள கதையில் ஆசிரியர் கனவு காண்பதைப்போல, ஆசிரியருக்கு பாடம் படிப்பிக்க மாணவர்கள் முயன்றால், தன்னை பரீட்சையில் சிறப்புச் சித்திபெறவைக்கவேண்டும் என்ற கோரிக்கையுடன் மாணவர்கள் அந்த பேராசிரியர் முன்னால் மண்ணெண்ணெயுடன் வந்து நிற்கிறார்களோ தெரியவில்லை.

**- ஊர்க்குருவி.**

## ஐ. எம். எவ்வுடனான பேச்சில் சிறந்த முன்னேற்றம் உள்ளது!

### மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஓக. 19

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் குழு வொன்று இந்த மாத இறுதியில் இலங்கை வரும் என்றும் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் விரைவில் உடன்படிக்கையை மேற்கொள்ள எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## வெளிநாட்டு நாணயங்களை விற்க வைப்பிலிடுவதற்கு மன்னிப்பு காலம்!

கொழும்பு, ஓக. 19

பொதுமக்கள் தமது கைவசம் வைத்துள்ள, வெளிநாட்டு நாணயங்களை வைப்பிலிடுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு ஒரு மாத பொது மன்னிப்பு காலத்தை நிதியமைச்சு அறிவித்துள்ளது.

வெளிநாட்டு நாணயங்களை வங்கித் தொழில் முறைமையினுள் கவரும் பொருட்டு இந்த சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 15 ஆம் திகதி முதல் ஒரு மாதத்துக்கு இந்த நடைமுறை அமலில் இருக்கும்.

இதன்படி, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வர்த்தக வெளிநாட்டு நாணயக் கணக்கில் குறித்த வெளிநாட்டு நாணயங்களை வைப்பிலிட முடியும்.

அத்துடன், உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி போன்ற அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விற்பனை செய்ய முடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை அந்நிய செலாவணி திணைக்களத்தின் 0112 477 255, 0112 398 511 என்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஐ)

## நடன அரங்கேற்றம்!

யாழ்ப்பாணம், ஓக. 19

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி - நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவியான செல்வி எறின் கிளன்சியா கிளன்சியஸ் லொயலாவின் பரத நாட்டிய நாட்டிய அரங்கேற்றம் நாளை சனிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர் கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடனக் கலையை பயின்று அரங்கேற்றத்தை மேற்கொள்கின்ற ஆறாவது மாணவியாவார்.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டன், சலங்கை நர்த்தனாலயா நுண்கலைக் கல்லூரியின் இயக்குநர் கலாநிதி ஜெயந்தி யோகராஜா, சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை நடனத்துறை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன், யாழ். கல்வி வலய நடனபாட ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

அணிசெய் கலைஞர்களாக ஸ்ரீமதி சுதர்சினி கரன்சன் நட்டுவாங்கம், நடன அமைப்பு, யாழ். பல்கலைக்கழக சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தின் இசைத் துறை முதுநிலை விரிவுரையாளர் இசைமாணி தவநாதன் றொபேட் குரலிசையையும், மிருதங்க ஞான வாரிதி சி.துரைராஜா மிருதங்க இசையையும், சுருதி வேந்தன் அ.ஜெயராமன் வயலின் இசையையும் வழங்கவுள்ளனர். (ஐ)

## திருக்கேதீஸ்வர ஆலய கும்பாபிஷேக மலர் வெளியீடு!

மன்னார், ஓக. 19

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் கும்பாபிஷேக மலர் வெளியீடும் எதிர் வரும்23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் ‘பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாம்’ இந்தக் கும்பாபிஷேக மலரைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய திருப்பணிச் சபையினர் அடியார்களை கேட்டுள்ளனர். (ஐ)

## யாழ் பாடி 7ஆவது மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன!

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்படவுள்ள ‘யாழ் பாடி -7 பிரதேச மலர்’ ஆக்க இலக்கிய சிறப்பு மலராக வெளிவரவுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் வதிவிடத்தைக் கொண்டவர்கள் இந்த மலருக்கு கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், மருத்துவம், வணிகம், உளவியல், ஆய்வு (இலக்கியம், தொல்லியல், ஆன்மீகம், வரலாறு), சூழலியல், சமூகவியல், கிராமிய கலைகள், கலை மரபும் பண்பாடும், அறிவியல் போன்ற தலைப்புகளில் ஆக்கங்களை சமர்ப்பிக்க முடியும்.

ஆக்கங்கள், பிரதேசம் சார்ந்த தொன்மைகளை அடையாளம் கண்டு பண்பாடு விழுமியங்களை வெளிக்கொணரும் வகையில் அமைய வேண்டும். ஆக்கங்கள் யாவும் ஏ4 தாளில் கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது கணனி தட்டச்சு பதிப்பாகவோ சமர்ப்பிக்க முடியும். இவை சுயபடைப்பாக அமைவதுடன், ஏற்கனவே வெளிவந்தவையாக அமைதல் கூடாது.

மலர்க்குழுவின் தீர்மானத்துக்கு அமைய ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கடித உறையின் இடதுபக்க மூலையில் ‘யாழ் பாடி - 7 பிரதேச மலர்’ எனக் குறிப்பிட்டு, முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்துடன் ‘பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்’, என்ற முகவரிக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ். சுதர்சன் அறிவித்துள்ளார். (ஐ)

## இலங்கை சிறுவர்களுக்கு உதவ மெல்பர்னில் கலை நிகழ்ச்சி!

மெல்பர்ன், ஓக. 19

அவுஸ்திரேலியா மெல்பர்னில் வதியும் இலங்கையைச் சேர்ந்த மூவினத்தவர்களும் இணைந்து, தமது தாயகத்தில் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு மருத்துவ ரீதியாக உதவ முன்வந்துள்ளனர்.

இதற்காக அவர்கள் இன்று வெள்ளிக்கிழமை மெல்பர்ன் - கிளேய்டன் சமூக மண்டபத்தில் இரவு 7-30 மணி முதல் 11-30 மணிவரையில் ஒன்றுகூடல் மற்றும் இசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் திரட்டப்படும் நிதி, இலங்கையில் குழந்தைகளின் மருத்துவ தேவைக்கான உபகரணங்கள், கருவிகளைப் பெறுவதற்காக றோட்டரி கழகம் ஊடாக வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு தொடர்பில் தகவல் தேவைப்படுவோர், மங்கல - 0412 286 640, சித்தி - 0433 325 798, - ஸ்ரீ கௌரி சங்கர் - 0421 869 644 ஆகியோரை தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
19.08.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ்த் தேசிய அரசியலில் புதிய சவால்கள்?

தமிழ்த் தேசிய அரசியல் இதுவரையில் எதிர்ப்பு அரசியலாகவே இருந்து வந்திருக்கின்றது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெற்றிகொள்வதே, இந்த எதிர்ப்பின் நோக்கமாகும். 1949இல் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, இதனை ஓர் அரசியல் பாரம்பரியமாகவே தமிழ்த் தேசிய கட்சிகள் பேணிப் பாதுகாத்து வந்திருக்கின்றன. இனியும் இவ்வாறானதோர் அரசியலை பேணிப் பாதுகாக்க வேண்டிய தேவைதான் இருக்கின்றது. ஏனெனில், சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வுக்கு இது வரையில் பச்சைக் கொடி காண்பிக்கவில்லை. ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட முழுமையாக அமுல்படுத்தவில்லை. இதில் தமிழ் அரசியல் கட்சிகளின் தவறுகளும் உண்டு. 2015இல் அவ்வாறான வாய்ப்பு இருந்த போதிலும்கூட, அதனை கச்சிதமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு சம்பந்தன் முயற்சிக்கவில்லை. சாத்திய மற்ற புதிய அரசியல் யாப்பில் நேரத்தை விரயம் செய்திருந்தார்.

ஆனால், எதிர்ப்பு அரசியலை தொடர்ந்தும் முன்னரைப் போன்று முன்னெடுப்பதிலும், இப்போது புதிய சவால்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது தொடர்பில் தமிழ்த் தேசியர்கள் என்போர் கவனமாக சிந்தித்து செயலாற்ற வேண்டும். 2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் என்பது, முற்றிலும் தேர்தல் மைய அரசியலாகவே இருக்கின்றது. தேர்தல் களில் மக்கள் வெறுமனே கொள்கை அடிப்படையில் மட்டும் வாக்களிப் பதில்லை. ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் பெரியளவில் தமிழ்க் கட்சிகள் தொடர்பில் மக்களிடம் எதிர்பார்ப்புக்கள் இருந்திருக்க வில்லை. ஏனெனில், போராட்டத்தின் மூலம் உச்சபட்சமான ஒரு தீர்வு தொடர்பில் மக்களிடம் நம்பிக்கையிருந்தது. ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல. உச்சபட்சமான அரசியல் தீர்வு தொடர்பில் இப் போது மக்களிடம் பெரியளவில் நம்பிக்கையில்லை. ஆனாலும் தமிழ் மக்கள் என்னும் உணர்வின் அடிப்படையில் வாக்களிக்கின்றனர். இந்த நிலைமை ஏற்றஇறங்கங்கள் உடையது. கடந்த பாராளுமன்ற தேர்த லில் இந்த நிலைமையை நாம் தெளிவாக அவதானித்திருந்தோம்.

எனவே, முன்னரைப் போன்று – “அடைந்தால் மகாதேவி இல்லாவிட் டால் மரணதேவி”, என்னும் அடிப்படையில் தமிழ்த் தேசிய கட்சிகள் செயலாற்ற முடியாது. எதிர்ப்பு அரசியலையும் தொடர வேண்டும் அதே வேளை, மக்கள் சலிப்படைந்து தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து வெளி யேறாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான உத்திகள் தொடர் பில் தமிழ்த் தேசியர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும். மாகாண மட் டத்தில் அபிவிருத்தி அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு, தேசிய அளவில் கொள்கை அடிப்படையிலான அரசியலை முன்னெடுக் கும் தந்திரோபாயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் சிந்திக்க வேண்டும். வெறும் கோஷங்களின் மூலம் மட்டும் அரசியலை முன் னெடுக்கும் காலம் முடிவுறுகின்றது. இதனை கருத்தில் கொள்ளாமல் செயல்பட்டால், தமிழ்த் தேசியக் கட்சிகள் மோசமான பின்னடைவுகளை சந்திக்க நேரிடும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது தொடர்பில் சிந்திக்கும் சூழலை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, வடக்கு – கிழக்குக்கான பிரத்தியேக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் சிந்திக்க வேண்டும். இதில் அனைத்துக் கட்சிகளும் இணை யும் வகையில், கூட்டு வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண் டும். எல்லாவற்றிலும் கொள்கை வாதங்களை முன்னிறுத்திக் கொண் டிருப்பது சரியான அணுகுமுறையல்ல. கொள்கை என்பது மக்களுக் கானதுதான். மக்களை கருத்தில் கொள்ளாத கொள்கையால் மக்களுக்கு என்ன நன்மை?

சர்வதேச அழுத்தங்கள், இந்தியாவை நோக்கிய செயல்பாடுகள் அனைத்தையும் வழமைபோல் முன்னெடுக்கும் அதேவேளை, தமிழ்த் தேசியத்தை முன்வைக்கும் கட்சிகள்மீது, மக்கள், நம்பிக்கை இழக்காத வகையிலான செயல்பாடுகளும் அவசியம்.

# நல்லூர்க் கந்தனுக்கு புதிய குமார கோபுரம்

**கலாநிதி ஆறு.திருமுருகன்**



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்த சுவாமி கோவில் சிறப்பை அறியாதவர்கள் இல்லை. ஈழத்தமிழர்களின் தலையாய கோவி லாக விளங்குவது நல்லூர்க் கந்தசுவாமி கோவில். தமிழ் வேந்தர் காலத்துக் கோவில் முற்றாக அழிக்கப்பட்டு கோவில் இருந்த இடத்தில் கிறிஸ்தவ ஆலயம் கட்டப்பட்டது. சுமார் 200 ஆண்டுகாலம் நல்லூரை நினைத்து சைவமக்கள் போர்த்துக்கேயர் இடித்த கோயில் கற்களில் சிலவற்றைக் கொண்டு போய் தமது வீடுகளிலே மறைவாக வைத்து வழிபாடு செய்தனர். அகத்தால் அழுத மக்கள் நல்லூர்க் கந்தனை நினைத்து வீடுகளில் கந்தபுராணத்தைப் பாடி முருகனை மறவாது வழிபட்டனர்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் நல்லூரில் வாழ்ந்த பெரியார் ரகுநாத மாப்பாண முதலியார் பல வருடங்களாக பலர் அகத்தில் சுமந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை தனது சொந்த முயற்ச்சியால் நிலத்தை விலை கொடுத்து வாங்கி தனது உடமைகளைப் பயன்படுத்தி கோயிலைக் கட்டுவித்தார். அப்பெருமகனார் சைவத் தமிழ் உலகத்துக்குச் செய்த அளப்பெரிய தொண்டே இன்று நாம் காணும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் என்னும் பெருங்கோயிலாகும். ஒல்லாந்தர் காலத்தில் கல்வியறிவும் நிலபுல சொத்துக்களால் சிறப்பும் பெற்ற ஸ்ரீமான் ரகுநாத மாப்பாண முதலியார் தனது கெட்டித்தனத்தால் ஒல்லாந்தரிடம் அனுமதி பெற்று இக்கோவிலை நிறுவினார். அன்று அவர் உயரிய சிந்தனையோடு செய்த மாபெரும் முயற்சி சைவத்தமிழர்களின் உன்னத பண்பாடு நிலைபெறுவதற்கு வித்திட்டது. ஸ்ரீமான் ரகுநாத மாப்பாண முதலியாரின் பரம்பரையில் வந்தவர்கள் இவ்வாலயத்தை இமைப்பொழுதும் மறவாது கட்டிக்காத்தனர். நல்லூர் முருகனுக்கு நான்கு கோபுரங்கள் அமைக்கப்பட்டு அழகாக காட்சியளிக்கிறது. இக்கோவிலின் இரண்டு பெரிய கோபுரங்களை உருவாக்கிய பெருமை சென்ற ஆண்டு அமரத்துவம் அடைந்த அறங்காவலர் குகஸ்ரீகுமாரதாஸ் மாப்பாண முதலியாரைச் சாரும். இந்த ஆண்டு தந்தையின் வழியில் ஆலயத்தை சீராக நிர்வகித்து வரும் நல்லூர் தேவஸ்தானத்தின் 10ஆவது அதிகாரி எனபோற்றப்படும் குகஸ்ரீ குமரேஸ் சயந்தன மாப்பாண முதலியார் அவர்களால் புதிய குமார கோபுரம் உருவாக்கப்பட்டுள்ளது. பஞ்சதளத்தைக் கொண்ட குமாரமகாராஜா கோபுரத்துக்கான கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. நல்லூர்க் கந்தனின் திருப்பூங்கொல்லையில் உள்ள அதிஅற்புதம் வாய்ந்த தீர்த்தக்கிணற்றுக்கருகில் இத்தெய்வீகத் திருக்கோபுரம் அழகாக கட்டப்பட்டுள்ளது. கோபுரத்துக்கு இருமருங்கிலும் இருபெரும் மணிக்கூட்டுக்கோபுரம் காட்சியளிக்கிறது.

நல்லூர்க் கந்தனின் அற்புதத்தால் இத்திருப்பணி நிறைவுபெற்றுள்ளது. எந்தவித ஆரவாரமுமின்றி அமைதியாக திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளது. நல்லூரில் திருப்பணிக்கு உதவுங்கள் என எவரையும் கூவி அழைப்பதில்லை. ஆனால், அடியார்கள் திருப்பணி தொடங்கிவிட்டால் தமது காணிக்கையை உண்டியலில் சேர்த்து விடுவார்கள். ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகைத் திருவிழாவில் கந்தனுடைய சந்நிதானத்தில் ஏதோ ஒரு புதுமை இடம்பெறும். இந்த ஆண்டு மகாகுமார கோபுரம் காட்சியளிக்கவுள்ளது.

இந்தியாவில் உள்ள தலங்களுக்கு ஈடாக இலங்கையில் நல்லூர்க் கந்தன் ஆலயம் மிளிர்வது சைவத்தமிழர்கள் செய்த மாதவமே. பஞ்சகோபுரங்களோடு, ஆறு மணிக்கோபுரங்களோடு, தங்கக் கூரையோடு வேலன் வீற்றிருக்கிறான். இவ்வாண்டு அவன் அழகிற்கு கம்பீரத்துக்கு மகாகுமாரகோபுர மும் எழுந்து நிற்கிறது.

நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழா தொடங்கிவிட்டால் நாடே புனிதமடைந்து விடும். எத்தனை இலட்சம் மக்கள் நல்லூரை நோக்கி வருகிறார்கள். நல்லூர் அதிசயம் கண்டு ஆனந்தம் கொள்கிறார்கள். கீழைத் தேயத்தவர்கள் மட்டுமன்றி மேலைத்தேயத்த வர்களும் நல்லூர் மேன்மையை தங்கள் மொழிகளில் பதிவு செய்கிறார்கள். நல்லூர் வேலன் இவ்வாண்டு கார்த்திகை வரப்பிர சாதமாக குமாரகோபுரத்தை தரிசிக்க வைத்துள்ளான். 19.08.2022ஆவணி மூன்றாம் நாள் காலை 6.00மணிக்கு கந்தனின் நந்தவனத்து பூங்கொல்லையில் குமார கோபுரத்தை அண்ணாந்து கரங்கூப்பி கண்ணாரக் கும்பிடுவோம் அனைவரும் வாரீர்!

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
உங்கள் செயலில் வெற்றி அடைவீர்கள். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். திட்டமிட்டிருந்த வேலை மனம் மகிழக் கூடிய அளவில் முடிவிற்கு வரும். சமுதாயத்தில் உங்களுடைய செல்வாக்கு உயரும்.

**இடபம்**
தவறான நபர்களின் நட்பினால் சில பிரச்னைகளை எதிர்கொள்ள நேரும். செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி குறித்து பேச்சு எழும். எதிர்பார்த்த வரவில் தாமதம் ஏற்படும்.

**மிதுனம்**
நெருக்கடி விலகும். நண்பர்களின் உதவியால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**கடகம்**
தொழிலை விருத்தி செய்யும் முயற்சி வெற்றியாகும். முயற்சி ஒன்றில் முன்னேற்றம் காண்பீர்கள். இழுபறியாக இருந்தவற்றில் மாற்றம் உண்டாகும். வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும்.

**சிம்மம்**
முக்கியமான செயல் முடிவிற்கு வராமல் தடுமாறுவீர்கள். வேலையில் தயக்கம் ஏற்படும். பிரச்னை ஒன்று உங்களை சங்கடப்படுத்தும். எதிரிகளால் சங்கடங்களுக்கு ஆளாவீர்கள்.

**கன்னி**
மனதில் பதட்டம் அதிகரிக்கும். உறவு வழியில் சங்கடத்தை சந்திப்பீர்கள். அலைச்சல் அதிகரித்தாலும் உடல் சோர்வடையும். எதிர்பார்த்த லாபத்தில் தடை ஏற்படும். வழக்குகளில் கவனம் செலுத்தவும்.

**துலாம்**
நண்பர்களின் ஆதரவால் எண்ணம் நிறைவேறும். நினைத்ததை நினைத்தபடி சாதிப்பீர்கள். உங்களுடைய அறிவாற்றல் இன்று வெளிப்படும். தடைபட்டிருந்த முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**விருட்சிகம்**
உங்களுக்கு உற்சாகம் ஏற்படும். விலகிச்சென்ற உறவினர் உங்களைத் தேடி வருவர். முக்கிய வேலையாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். வீட்டில் திருமணப் பேச்சு எழும்.

**தனுசு**
நீங்கள் எதிர்பார்த்த நன்மையை உங்களால் காண முடியாமல் போகும். யோசித்து செயல்பட வேண்டிய நாள். உங்கள் மன நிலையை பாதிக்கும் வகையில் சில நிகழ்வு நடைபெறும்.

**மகரம்**
தங்களுடைய பணியில் கவனமுடன் செயல்படுவீர்கள். நேர்மையால் நன்மை உண்டாகும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள். அதில் குழப்பம் உண்டாகும். அரசு விவகாரத்தில் இழுபறி ஏற்படும்.

**கும்பம்**
நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்பத்தினர் உதவியுடன் வெற்றி பெறுவீர்கள். செல்வாக்கு உயரும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி வெற்றியாகும். தொழிலில் இருந்த தடை நீங்கும்.

**மீனம்**
வேலை விஷயமாக வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். உற்சாகத்துடன் செயலை ஒன்றை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தினர் உங்களுடைய முயற்சிகளுக்கு உதவியாக இருப்பர். மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

# பிரதமரிடம் பல கோரிக்கைகளை முன்வைத்தார் முதல்வர் ஸ்டாலின்!

*புதுடில்லி, ஓக. 19*

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர் பிடிக்கப்படுவதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை பிரதமர் நரேந்திர மோடியிடம் முன் வைத்துள்ளார்.



சென்னை, டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் மு. க. ஸ்டாலின் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

இதன்போது, செஸ் ஒலிம்பியாட் போட்டியை தொடங்கி வைத்தமைக்காகப் பிரதமருக்கு நன்றி தெரிவித்த முதல்வர், தமிழகத்தின் கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் அளித்தார்.

நேற்று முன்தினம் மாலை, பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் ஸ்டாலின் சந்தித்துப் பேசினார். சுமார் அரைமணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, நீட் பரீட்சை விலக்கு, ஜி. எஸ். டி. வரி இழப்பீட்டை இரு ஆண்டுகள் நீடிப்பது, புதிய கல்விக் கொள்கை, தமிழகத்துக்கு துறைகள் வாரியாக வரவேண்டிய நிலுவைத் தொகைகள், இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவது, நதிநீர் இணைப்புத் திட்டம் உள்ளிட்ட கோரிக்கைகளை முதல்வர் வலியுறுத்தினார் என்று கூறப்படுகின்றது.

இந்த சந்திப்பின் போது, பிரதமருக்கும் பாரம்பரிய நெல் ரகங்கள், சிறுதானியங்கள் அடங்கிய நினைவுப் பரிசு மற்றும் செஸ் ஒலிம்பியாட் நிகழ்வுகள் அடங்கிய தொகுப்பு நூல் ஆகியவற்றை முதல்வர் வழங்கினார். (ஐ)

# கொள்கையின்றி குலைகிறது அ.தி.மு.க. இதனைப் பயன்படுத்துகின்றது பா.ஜ.க.

## கம்யூனிஸ்ட் கட்சி விமர்சனம்

*புதுச்சேரி, ஓக. 19*

"அ. தி. மு. க. கொள்கை இல்லாமல் சீர் குலைந்து வருகிறது. இதனை பா. ஜ. க. பயன்படுத்த விரும்புகிறது" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற கட்சியின் தேசிய செயலாளர் டி. ராஜா மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "சிறுபான்மையின மக்கள்மீது எப்போதும் கண்டிராத அடக்குமுறைகள், கொடுமைகள் அதிகரித்து வருகின்றன. தலித்துகள், பழங்குடி மக்கள், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து வருகின்றன.

ஒருபுறம் அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி என்றால், மற்றொருபுறம் சமூக ரீதியாக இந்தியாவில் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில் நாடு, ஜனநாயகம், கூட்டாட்சி நெறிமுறைகள், அரசியல் சட்டம் ஆகியவை காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக மத சார்ப்பற்ற ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையை நமது கட்சி வலியுறுத்தி வருகிறது. வருகிற 2024ஆம் ஆண்டு நடைபெறுகிற பாராளுமன்ற தேர்தலில் பாஜகவை வீழ்த்த அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும்.

அ. தி. மு. க.பொதுக்குழு வழக்கில் நீதிமன்ற அளித்த தீர்ப்பு குறித்து அ. தி. மு. கவின் இரு பிரிவுகள் யோசிக்க வேண்டும். ஆனால், இப்போது அ.தி.மு.க. கொள்கை இல்லாத நிலையில் சீர் குலைந்து வருகிறது. அதனை பா.ஜ.க. பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறது. இதை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்" - என்றார்.

# அ.தி.மு.கவின் ஜூலை 11 பொதுக்குழு செல்லாது!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

*சென்னை, ஓக. 19*

அ. தி. மு. க. கட்சியின் கடந்த ஜூலை 11ஆம் திகதி நடந்த பொதுக் குழுக் கூட்டம் செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.



சென்னை வானகரத்தில் அ. தி. மு. க. இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி தலைமையில் கடந்த ஜூலை 11ஆம் திகதி சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் அவர் கட்சியின் இடைக்காலப் பொதுச் செயலாளராக தெரிவானார். அத்துடன், ஓ. பன்னீர்செல்வம் மற்றும் அவரின் ஆதரவாளர்களும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதை எதிர்த்து ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில், கடந்த ஜூலை 11ஆம் திகதி நடத்தப்பட்ட பொதுக்குழு செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

இது பழனிசாமி தரப்புக்குப் பின்னடைவாகக் கருதப்படுகிறது. தீர்ப்பு விவரம் வெளியானவுடன், சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள பன்னீர்செல்வம் இல்லம் முன்பு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கூடி, தீர்ப்பை வரவேற்று உற்சாக நடனமாடினர்.

இதேசசாலையில் உள்ள பழனிசாமியின் இல்லத்துக்கு முன்னாள் அமைச்சர்கள், கட்சி தலைமை அலுவலர்கள் கூடி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்துப் பேசினர். (ஐ)

# கட்சி அபகரிப்பை நீதி, தர்மம் ஏற்காது

## பன்னீர்செல்வம் அறிக்கை

*சென்னை, ஓக. 19*

"சட்டத்துக்கு புறம்பாக கட்சியை அபகரிப்பதை நீதியும், தர்மமும் ஏற்றுக் கொள்ளாது" என்று கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

ஜூலை 11 பொதுக் குழு கூட்டம் செல்லது என்ற நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பில், இது தொடர்பில் பன்னீர்செல்வம் தெரிவித்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தர்மத்தையும், நீதிமன்றங்களையும், அ. தி. மு. க. தொண்டர்களையும், அ. தி. மு. கவை தோற்றுவித்த எம். ஜி. ஆர். வளர்த்தெடுத்த ஜெயலலிதா உள்ளிட்டோரை நம்பினேன். அந்த நம்பிக்கை இன்று உண்மையாகி இருக்கிறது.

அரசியல் கட்சியை சட்டத்துக்கு புறம்பாக அபகரிப்பதை நீதியும், தர்மமும், தொண்டர்களும், பொதுமக்களும், குறிப்பாக தெய்வமும் ஏற்றுக்கொள்ளாது என்பதை இந்தத் தீர்ப்பு மெய்ப்பித்திருக்கிறது. அ. தி. மு. க.வின் ஒன்றரை கோடி தொண்டர்களை அரவணைத்துச் செல்வேன். கட்சியின் கசந்த காலங்கள், இனி வசந்த காலங்களாக மாறும் - என்றுள்ளது. (ஐ)

# கடினமான காலகட்டத்தை கடந்து பயணிக்கின்றோம்

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 19

"இப்போது நாம் கடினமான காலத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். அதிர்ஷ்டவசமாக, எங்கள் தேவைகளுக்குச் செலுத்த இரண்டு அல்லது மூன்று மில்லியன் டொலரைத் தேட வேண்டியிருந்த காலத்தை கடந்துவிட்டோம். ஆனால் நாம் இன்னும் நெருக்கடியை வெற்றிகொள்ளவில்லை. இறக்குமதியில் தங்கியிருக்கும் பொருளாதாரமாக நாம் தொடர்ந்து பயணிக்க முடியாது. தற்போது நமது வர்த்தக் கையிருப்பு நமக்கு சாதகமாக இல்லை."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு மோசமாக உள்ளது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நான் நிதி அமைச்சராக பதவியேற்றதும் அந்நியச் செலாவணியில் இலங்கை என்ற ஒரு நாட்டை விடவும் நான் பணக்காரன் என்பதை உணர்ந்துகொண்டேன். என் வீட்டில் ஆயிரம் டொலர் சேமிப்பில் உள்ளது. அதன்படி, நான் நாட்டை விட ஆயிரம் மடங்கு பணக்காரன். அதுதான் யதார்த்தம்.

இப்போது நாம் பொருளாதார உறுதிப்பாட்டை உருவாக்க வேண்டும். நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகின்றோம். பணிக்குழாம் இணக்கப்பாட்டுக்கு இறுதி நிபந்தனைகளைத் தயாரிப்பதற்கு இப்போது இரண்டு குழுக்கள் உள்ளன.

கடன் பொதியொன்றை வழங்கத் திட்டமிட்டு சீனக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதல் நிதி உதவி வழங்கவும் தயாராகியுள்ளது. இந்த இலக்குகளை எவ்வாறு அடைவது என்பது குறித்து நாம் ஜப்பானுடன் கலந்துரையாடினோம். நாங்கள் ஏற்கனவே இந்தியாவுடன் பேச்சு ஆரம்பித்துள்ளோம்.



நாம் விரைவாக செயற்பட்டால், இந்த நெருக்கடி குறுகிய காலமே நீடிக்கும். ஆனால் நாம் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருந்தால், அனைவரும் துன்பப்பட வேண்டி ஏற்படும். நாம் மீண்டும் பழைய அரசியலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது பழைய முறையை கொண்டு வருவதற்காகவா? என்பதுதான் கேள்வி.

முதலில் 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவேன். அதன் பின்னர் பாராளுமன்றத்தை அரசாக மாற்ற நாம் முயற்சிப்போம். துறைசார் மேற்பார்வைக் குழு, தேசிய சபை, மேற்பார்வை நிறைவேற்றுக் குழு ஆகியவற்றில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் பங்கேற்க முடியாது.

குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை அழைக்கலாம். குழுத் தலைவரின் அனுமதியுடன் அவர்கள் கட்சிகளிடம் கேள்வி எழுப்பலாம். உலகில் வேறு எந்த நாட்டிலும் இளைஞர்களுக்கு துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பங்கேற்க வாய்ப்பை வழங்கியதில்லை. இந்த பாராளுமன்றத்தின் ஊடாக புதிய முறையை நோக்கி நாம் பயணிக்க முடியும். அதை வேறொரு குழுவிடம் ஒப்படைக்க முடியாது. இதனால் புதிய அரசமைப்பை நோக்கிச் செல்ல முடியும். இனங்களுக்கிடையில் உள்ள பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததால் மீண்டும் நாம் போரில் ஈடுபட வேண்டியதில்லை.

நான்காவது தொழில் புரட்சிக்கு நாம் இப்போது தயாராக வேண்டும். பணம் சம்பாதிப்பதற்கான வழிகளைக் கண்டறிய அதைப் பயன்படுத்தலாம். ஆனால், நமது பொருளாதாரம் முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும். அரச துறை வீழ்ச்சியடையும் போது, கல்வி, சுகாதாரம், வீடு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நம்மிடம் பணம் இருக்க வேண்டும்.

நமது தேர்தல் முறைகள் குறித்தும் சிந்திக்க வேண்டும். விருப்பு வாக்கு முறையானது வாக்களிப்பு முறைக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் நாடாளுமன்றத்தில் புதிய முறையொன்றை கொண்டுவரும் திறன் நமக்கு இருக்கவேண்டும்-என்றார். (அ)

# கோட்டாபய நிம்மதியாக வாழும் சூழலை வழங்கவேண்டும் அரசு!

## கூறுகின்றார் வாசுதேவ



கொழும்பு, ஓக. 19

'முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்ப வேண்டும், அவர் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக் கிக்கொடுக்கவேண்டியது எம் அனைவரினதும் பொறுப்பாகும்."

- இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடு திரும்பும் கோட்டா, மீண்டும் அரசியலில் ஈடுபடமாட்டார் எனவும் அவர் கூறினார். (அ)

# பல்கலைக்கழக அனுமதிக்கு அடையாள அட்டை அவசியம்!

கொழும்பு, ஓக. 19

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது மாணவர்கள் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்கவேண்டியது கட்டாயமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த அறிவித்தலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாத பட்சத்தில் வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணத்தை முன்வைக்கும் விண்ணப்பதாரர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

எனினும், குறித்த ஆவணத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உயர்தர பரீட்சையின் முடிவுகள் இம் மாத இறுதியில் வெளியிடப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் அறுவடை நிகழ்வு



மன்னார், ஓக. 19

தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் இயற்கையான முறையில் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய அறுவடை விழா நேற்று முன்தினம் பிற்பகல் மாலை 3.00 மணிக்கு இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு அறுவடை விழாவை ஆரம்பித்து வைத்தார்.

அதிதிகளாக மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளரும், உற்பத்தித் திறன் பிரிவின் பிரதம இணைப்பாளருமான கே.லிங்கேஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலாளர் ஆ.லதுமீரா, உலக உணவுத் திட்டத்தின் மாவட்ட பொறுப்பதிகாரி ஜெயபவாணி, வவுனிக்குள நீர்ப்பாசன தொகுதி பொறியியலாளர், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு தோட்டத்தை பார்வையிட்டதைத் தொடர்ந்து செய்கை பண்ணப்பட்ட பயிர் அறுவடை விழாவை தொடர்ந்து, பயிரிடல் செய்முறையை முன்னிலைப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட காணொளி வெளியீடும், அதிதிகளின் உரைகளுடன் அனுபவப்பகிர்வுகளும் இடம்பெற்றன.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்திற்கு அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்பை முன்மாதிரியாக எடுத்துக்காட்டும் முகமாகவே குறித்த பிரதேச செயலக வளாகத்தில் இயற்கை விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கெய்லியைக் காணவில்லை!

கொழும்பு, ஓக. 19

சர்சைக்குரிய பிரித்தானியப் பெண்ணான கெய்லி பிரேசரின் மனு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அவரைக் கண்டு பிடிப்பதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அந்த திணைக்களம் கூறியுள்ளது.

தம்மை இலங்கையில் இருந்து நாடு கடத்துவதற்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் எடுத்த தீர்மானத்தை ரத்து செய்யக் கோரி கெய்லி பிரேசர் செய்த விண்ணப்பத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை நிராகரித்திருந்தது.

நீதிமன்ற மேன்முறையீட்டு நீதியரசர், குடியகல்வு மற்றும் குடிவரவு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு காரணம் கூறாமல் விஸாவை நிறுத்தவோ அல்லது ரத்து செய்யவோ உரிமை உள்ளதாகவும், உயர் நீதிமன்றமும் வழங்கிய தீர்ப்புகளாலும் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.



சமூக ஊடகங்களில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் தொடர்பாக உள்ளடக்கத்தை வெளியிட்ட குறித்த ஸ்கொட்லாந்து சுற்றுலாப் பயணி கெய்லி பிரேசருக்கு வழங்கப்பட்ட விஸாவை நிறுத்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் முடிவு செய்தது.

ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையை விட்டு வெளியேறுமாறும் திணைக்களம் அவருக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அன்னாசி பழத்தின் விலை அதிகரிப்பு!



கொழும்பு, ஓக. 19

தட்டுப்பாடு காரணமாக இது வரை 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு அன்னாசிப்பழத்தை தற்போது 700 ரூபாவுக்கும் மேலான விலையில் விற்பனை செய்ய நேரிட்டுள்ளதாக சில்லறை விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைய நாட்களில் ஒரு கிலோ அன்னாசிப்பழம் 250 ரூபா முதல் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

அன்னாசிப்பழத்திற்கான தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு என்பன காரணமாக நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டி வந்த அன்னாசிப்பழ ஏற்றுமதி முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமைக்கு அரசாங்கம் தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெரிய நாடுகள் சிலவற்றுக்கு அன்னாசிப்பழத்தை ஏற்றுமதி செய்து வந்த வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

அன்னாசிப்பழங்களை பயிரிடுவதற்காக பயன்படுத்தப்படும் உரம் மற்றும் எண்ணெய் வகை என்பன இல்லாத காரணத்தினால், அறுவடை குறைந்துள்ளது. இதுவே விலை அதிகரிப்பு பிரதான காரணம் என தெரியவந்துள்ளது. (அ)





# மனோ, திகா அமைச்சு பதவிகள் ஏற்றால் கூட்டணியிலிருந்து வெளியேறுவார் ராதா

கொழும்பு, ஓக. 19

**சர்வகட்சி அரசில் இணைந்து அமைச்சு பதவியை பெற்றும் கொள்ளும் முடிவை ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தொழிலாளர் தேசிய சங்கம் என்பன எடுக்கும் பட்சத்தில், தமிழ் முற்போக்குக் கூட்டணியில் இருந்து மலையக மக்கள் முன்னணி வெளியேறும் என அக்கட்சியில் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

சர்வகட்சி அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்ளாமல், எதிரணியில் இருந்தவாறு, சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கும், மக்கள் நலத் திட்டங்களுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆதரவளிக்கவேண்டும் என்ற முடிவை கூட்டணியின் பங்காளிக்கட்சிகளுள் ஒன்றான மலையக மக்கள் முன்னணி எடுத்துள்ளது.

இது தொடர்பில் முன்னணியின் தலைவர் வீ . இராதாகிருஷ்ணனால் கூட்டணியின் தலைவருக்கு கடிதமொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது டலஸ் அழகப்பெருமவை ஆதரித்துவிட்டு, அமைச்சு பதவிகளுக்காக ரணிலை ஆதரிப்பது எந்த வகையில் நியாயம் என மலையக மக்கள் முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

எனவே, கூட்டணியில் உள்ள ஏனைய இரு கட்சிகளின் தலைவர்களும் அமைச்சு பதவிகளை பெற்றால், கூட்டணியில் இருந்து மலையக மக்கள் முன்னணி வெளியேறும் நிலைப்பாட்டிலேயே உள்ளதென தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இது தொடர்பில் இன்னும் உத்தியோகப்பூர்வ தகவல்கள் வெளியாகவில்லை. ஆனால் பங்காளிகளின் செயற்பாடுகள் தொடர்பில் மலையக மக்கள் முன்னணி கடும் அதிருப்தியில் இருப்பது உறுதியென அக்கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# நாமலுக்கு அமைச்சுப் பதவியா? 'பிளக் கப் மூமன்ட்' கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 19

சர்வகட்சி அரசில் நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படுவதை தமது அமைப்பு கடுமையாக எதிர்ப்பதாக 'பிளக் கப் மூமன்ட்' தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பால் ஊடக அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

ராஜபக்ஷக்கள் இல்லாத ஆட்சியையே மக்கள் எதிர்பார்க்கின்றனர் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு மொட்டு கட்சி உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் பின்னணியில் நாமல் இருப்பதாக நம்பப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையிலேயே மேற்படி அமைப்பு குறித்த அறிக்கையை வெளி யிட்டுள்ளது. (அ)

# சரிவடையும் தங்கம்!

கொழும்பு, ஓக. 19

தங்கம் விலையானது மூன்றாவது நாளாக சர்வதேச சந்தையில் 1800 டொலர்களாக சரிந்து காணப்படுகின்றது.

இதற்கமைய, தங்கத்தின் விலையானது சற்று குறையலாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

பணவீக்கத்திற்கு எதிராக தங்கம் இருந்து வரும் நிலையில் தற்போது சர்வதேச சந்தையில் அவுன்ஸுக்கு பெரியளவில் மாற்றமின்றி, 1790.70 டொலர்களாக வர்த்தகமாகி வருகின்றது.

எதிர்வரும் நாட்களில் தங்க விலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும், டொலரின் மதிப்பு தற்போது மீண்டும் ஏற்றம் காண ஆரம்பித்துள்ளதன் காரணமாக தங்கம் விலையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச சந்தையில் வெள்ளி விலை சற்று குறைந்துள்ளதாகவும் இருப்பினும் மீண்டும் அதிகரிக்கலாம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஊவா ஆளுநர் பதவிக்கு மும்முனைப் போட்டி!

கொழும்பு, ஓக. 19

ஊவா மாகாண ஆளுநர் பதவிக்கு மும்முனை போட்டி நிலவுகின்றது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான யோகராஜன், இ.தொ.காவின் உறுப்பினர் ஒருவர் மற்றும் மொட்டுக் கட்சி பிரமுகருக்கிடையில்தான் இப்போட்டி நிலவுகின்றது.

சர்வகட்சி அரசை ஆதரிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த நிபந்தனைகளில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி மற்றும ஆளுநர் பதவி என்பனவும் உள்ளடங்குகின்றன.

இக்கட்டான சூழ்நிலைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் செயற்பட்டவர்தான் யோகராஜன். அவருக்கு ஐக்கிய தேசியக்கட்சி தேசியப்பட்டியல் வாய்ப்பைக் கூட வழங்கியிருந்தது.

எனவே, யாருக்கு ஊவா மாகாண ஆளுநர் பதவியை வழங்குவது என்பது குறித்து தற்போது இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. (அ)

# சிறப்பு ரயில், பஸ் சேவைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 19

முக்கிய வழித்தடங்களில் எதிர்வரும் செப்ரெம்பர் முதல் வார இறுதி நாட்களில் சிறப்பு ரயில்கள் மற்றும் பஸ் சேவைகளை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பொதுப் போக்குவரத்திற்கான தேவை அதிகரித்து வருவதால் பெரும்பாலான புகையிரதங்கள் முன்பதிவு செய்யப்படுகின்றமை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தனவும் இந்த விடயத்தை உறுதிப் படுத்தியுள்ளார்.

குறிப்பாக வார இறுதி நாட்களில் விசேட ரயில் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த சிறப்பு ரயில் சேவை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்த அவர், இரண்டு சோதனை ஓட்டங்கள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், போக்குவரத்து அமைச்சு வேறு சில இடங்களுக்கு ஒருங்கிணைந்த ரயில் - பஸ் சேவையை அறிமுகம் செய்யவுள்ளதாக கூறப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களுடன் இணைந்து பெலியத்தவிலிருந்து கதிர்காமத்திற்கு பயணிக்கும் பயணிகள் மறுநாள் அதே பாதையில் திரும்பிச் செல்லும் வகையில் ஒன்றிணைந்த பஸ் சேவையை ஆரம்பிப்பது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, அனுராதபுரத்துக்கு வார இறுதி ரயில் மற்றும் பஸ் சேவையும், எட்டு புனித தலங்களுக்கு செல்வதற்கு சிறப்பு பஸ் சேவையும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

கண்டி, பாசிக்குடா மற்றும் கல்குடா போன்ற இடங்களுக்கும் இதேபோன்ற போக்குவரத்துத் திட்டங்களை அறிமுகப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# கப்பலிலிருந்து மசகு எண்ணெயை இறக்கும் பணிகள் நேற்று ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 19

இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் கப்பலில் எண்ணெய் இறக்கும் பணி இன்று முதல் தொடங்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

100,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெயை ஏற்றிக்கொண்டு குறித்த கப்பல் நேற்று முன் தினம் இரவு நாட்டை வந்தடைந்தது.

அதன் ஆய்வுக்குப் பிறகு நேற்று முதல் மசகு எண்ணெய் இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளையும் இந்த வாரம் முதல் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், மற்றொரு மசகு எண்ணெய் கப்பல் வரும் 29ஆம் திகதிக்குள் நாட்டை வந்தடையவுள்ளது. இந்தக் கப்பலில் 20,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு மசகு எண்ணெய்க் கப்பல்களும் ரஷ்ய நிறுவனத்திடம் இருந்து வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (அ)

# பிஸ்கட்டுக்களின் விற்பனை வீழ்ச்சி!

கொழும்பு, ஓக. 19

பிஸ்கட் விலை உயர்வால் அவற்றின் விற்பனையும் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக சில கடைகளில் பிஸ்கெட்டுகளுக்கும் விலைக்கழிவு வழங்கப்படுகிறது.

அதீத விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிலர் பிஸ்கட் கொள்வனவை புறக்கணிப்பதாக சமூக ஊடகங்களில் பிரசாரம் செய்து வரும் நிலையில், விற்பனை குறைந்துள்ளது.

இதனால் நுகர்வோர் பிஸ்கட் உட்கொள்வதை நிறுத்தினால் தமது தொழிற்சாலைகளை மூட நேரிடும் என இலங்கை தின்பண்ட உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் எஸ்.எம்.டி. சூரியகுமார வாடிக்கையாளர்கள் பிஸ்கட் வாங்குவதை நிறுத்தினால், அவர்கள் தங்கள் தொழிலை நிறுத்திவிட்டு வேலையையும் இழக்க நேரிடும் என்று கூறினார்.

பிஸ்கட்டுக்களுக்கான மா மற்றும் மூலப் பொருட்களின் விலை அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் அதன் உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படவில்லை எனவும், இலாபம் மிகக் குறைவான வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இனிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலை கடந்த காலங்களில் கிட்டத்தட்ட இருநூறு சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# 8 மாதங்களில் 4,000 பேர் நாய்க் கடிக்கு இலக்கு!

கொழும்பு, ஓக. 19

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நாய்க் கடிக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 4,000 ஆக அதிகரித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் பிரதிச் செயலாளரும் பதுளை மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள கடுமையான மருந்து தட்டுப்பாடு தொடர்பில், பதுளை - பொது வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், நாய் மற்றும் பூனைக் கடிகளுக்கு இலக்காவதால் ஏற்படும் நீர்வெறுப்பு நோயைத் தடுப்பதற்காக வழங்கப்படும் ஊசி மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.

இவ்வாறு செல்லப்பிராணிகள் அல்லது கட்டாக்காலி நாய்களால் ஒருவர் காயங்களுக்கு உள்ளானால் அந்த பிராணியை 14 நாட்களுக்கு பாதுகாப்பாக பராமரிக்குமாறு ஆலோசனை வழங்கும் அளவுக்கு சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன - என்றார். (அ)

# தேசிய பாதுகாப்பு குறித்து அதிகளவு கவனம் அவசியம்

## கூறுகின்றார் பாதுகாப்பு செயலர்

**கொழும்பு, ஓக.19**

**நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும் என பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.**

தேசிய பாதுகாப்பு கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடத்தப்படும் ஆராய்ச்சி கருத்தரங்கின் நேற்று முன் தினம் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

பாதுகாப்பு தொடர்பில் காணப்படும் அனைத்து அச்சுறுத்தல்களையும் முகங்கொடுப்பதற்கு இலங்கை அவதானமாக செயற்படவேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பிரஜைகள் பொருளாதாரம் மற்றும் பிற நிறுவனங்களை பாதுகாப்பதானது



அரசாங்கத்தின் திறனாகும்.

ஆயுத மற்றும் போதைப்பொருள் கடத்தல், சட்ட விரோதமான கட்டுப் பாடற்ற மீன்பிடி, புவி வெப்பமடைதல் மற்றும் அதன் விளைவாக கடல் மட்ட உயர்வு, காலநிலை மாற்றம், அதிகரித்த கடல் மாசுபாடு மற்றும் கடல் சுற்றுச் சூழல் தாக்கம் உள்ளிட்ட விடயங்கள் இந்து சமுத் திரத்தில் இலங்கையின் பாதுகாப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன-என்றார். (அ)

# மே-9 வன்முறை சம்பவம் தொடர்பில் விசாரணை!

கொழும்பு, ஓக. 19

நாட்டில் கடந்த மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை முதல் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ரோஹினி மாரசிங்க தெரிவித்துள்ளார்.

மே 9 வன்முறை மற்றும் வீடுகளுக்கு தீவைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பயணத் தடையை தளர்த்திய பிரான்ஸ்!

கொழும்பு, ஓக. 19

இலங்கைக்கான அத்தியாவசியமான பயணங்களை மட்டும் பரிந்துரைக்கும் தீமானத்தை பிரான்ஸ் அரசாங்கம் தளர்த்தியுள்ளது.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலை மேலும் நீட்டிக்கப்படாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்த ஒரு நாளுக்குப் பிறகு, இந்த அறிவிப்பை பிரான்ஸ் அரசு வெளியிட்டுள்ளது.

மேலும் பிரான்ஸ் அரசாங்கம் தனது குடிமக்களுக்கு இலங்கையில் பயணம் செய்யும்போது அதிக விழிப்புடன் இருக்குமாறும் பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, பதிவு செய்யப்பட்ட சுற்றுலா வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகங்களை நிர்வகிப்பதற்கு சிறந்த இடத்தில் இலங்கை இருப்பதோடு உள்ளூர் பயண நிறுவனங்களுடன் பயணத் திட்டங்களை முன்னோக்கிச் செல்லுமாறு பிரான்ஸ் அரசாங்கம் பயணிகளை வலியுறுத்தியுள்ளது.

# 10 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்த ஆண்டில் இலங்கை வருவர்

கொழும்பு, ஓக. 19

இந்த வருடத்தில் 10 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதன் பணிப்பாளர் நாயகம் தம்மிக்கா விஜேசிங்க கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்தார்.


சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக டிஜிற்றல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# ஒமிக்ரோன் வைரஸ் தொற்றினால் காய்ச்சலுக்குள்ளாகும் சிறுவர்கள்!

கொழும்பு, ஓக. 19

ஒமிக்ரோன் வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் கடுமையான காய்ச்சலுக்குள்ளாகும் அபாயம் அதிகரித்துள்ளது.

லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் கோசல கருணாரத்ன இந்த



விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இரண்டாவது நாளிலும் தொடர்ந்து காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாக வைத்தியரிடம் செல்லுமாறும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் உள்ள சிறுவர்களுக்கு ரெபிட் அன்ரிஜென் பரிசோதனை அல்லது டெங்கு அன்ரிஜென் பரிசோதனை நடத்துவது முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் காய்ச்சல் ஏற்பட்டால், வலி நிவாரணிகளை கொடுக்காமல், பராசிட்டமோல் மாத்திரம் கொடுப்பது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சிறுவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம் எனவும் சிறப்பு மருத்துவர் கோசல கருணாரத்ன கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# அரசியல் பழிவாங்கல்கள் என்ற போர்வையில் சிலருக்கு சலுகை வழங்குவதை ஏற்கமுடியாது!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 19

அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகியுள்ளது இந்நாட்டின் 220 இலட்சம் மக்களே எனவும், அவர்களை பழிவாங்கும் நடவடிக்கையில் இருந்து காப்பாற்றுவதையே அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கலுக்கு ஆளான அரச அதிகாரிகள் குழுவொன்றுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்று பிரதமர் அலுவலகத்தின் ஊடாக முன்வைக்கும் நடவடிக்கையில் மொட்டுக் கட்சி துரிதமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இத்தருணத்தில் அவ்வாறானதோர் செயலை மேற்கொள்ள ஒருபோதும் இடமளிக்கமாட்டேன்



எனவும் கூறினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தன்னிச்சையான முடிவினால் உரங்களுக்கு தடை விதிக்கப்பட்டதால் விவசாயிகளின் பயிர்கள் சேதமடைந் துள்ளதோடு, இன்றும் அவர்களுக்கான நட்டஈடு வழங்கப்படவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். இரண்டு வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டின் பிள்ளைகள் முறையான கல்வியை பெறவில்லை எனவும் அவர் கூறினார்.

வங்குரோத்து நிலையிலுள்ள நாட்டை மேம்படுத்துவதை விட்டு விட்டு, இது போன்ற அரசியல் பழிவாங்கல்கள் என்ற போர்வையில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு சலுகைகள் வழங்கப்படுவதை தாம் எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# ரெட்டாவின் வங்கிக்கணக்கில் ரூபா 50 இலட்சம் வைப்பிலிட்டவரை அடையாளம் கண்ட சி.ஐ.டி.!

கொழும்பு, ஓக. 19

காலிமுகத்திடல் போராட்டத்தின் ஆரம்பம் முதல் முன்னணி செயற்பாட்டாளராக செயற்பட்ட ரெட்டா என அழைக்கப்படும் ரதிந்து சேனாரத்னவின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் 50 இலட்சம் ரூபாவை வைப்பிலிட்ட நபரை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வு பிரிவிற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தபோதிலும், சந்தேக நபர் நேற்று முன்தினம் அங்கு வருகை தந்திருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஜா-எல பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் வங்கிக் கிளையொன்றிலுள்ள ரதிந்து சேனாரத்ன பிரத்தியேக சேமிப்புக் கணக்கில் இந்தப் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது. பணம் வைப்பு செய்யப்பட்ட அதே நாளில், ரதிந்து சேனாரத்னவும் சம்பவம் குறித்து தனியார் வங்கியில் முறைப்பாடு செய்திருந்தார்.

பின்னர், அவர் தனது தனிப்பட்ட பேஸ்புக் பக்கத்தில் இட்டுள்ள பதிவில், தான் இவ்வாறான பொறிகளில் சிக்குவதில்லை எனவும், வர்த்தகம் மற்றும் கணக்கியல் தொடர்பில் தனக்கு கல்வித் தேர்ச்சி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் போராட்டத்திற்காக தனது தனிப்பட்ட பணத்தைச் செலவு செய்து வரும் தன்னை இவ்வாறான பொறிகளின் ஊடாக சிக்கவைக்க முடியாது என ரதிந்து சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (அ)

# சல்மான் ருஷ்டியின் மறுபக்கம்:

## இந்திரா காந்தியிடம் மன்னிப்பு கேட்ட எழுத்தாளர்! பாகிஸ்தான் அலி பூட்டோவை விமர்சித்த படைப்பாளி!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**

சல்மான் ருஷ்டியின் படைப்புகள் அனைத்தும் பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கி இருக்கும், அல்லது அவரது படைப்புகள் எப்போதும் ஏதோ ஒரு வகையில் தன்னை உலகளவில் விளம்பரப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் கருதப்படுகிறது.

சல்மான் ருஷ்டி, தனது எழுத்தின் காரணமாக பல ஆண்டுகள் தலைமறைவாக இருந்த இந்தியப் வம்சாவளியைச் சேர்ந்த நாவலாசிரியர்.

**நியூயோர்க் விரிவுரையில் கத்தி குத்து:**

சல்மான் ருஷ்டி, நியூயார்க் மாநிலத்தில் நடந்த விரிவுரையின் போது மேடையில் கழுத்து மற்றும் உடற்பகுதியில் கத்தியால் குத்தப்பட்டு, விமானம் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். தற்போது சல்மான் ருஷ்டி மீது தாக்குதல் நடத்தப்பட்டது உலக அளவில் பாரிய கண்டனத்தையும், சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது. கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்குதல் என்று உலகெங்கிலும் உள்ள எழுத்தாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளால் கண்டிக்கப்பட்டுள்ளது.

**மரணதண்டனை விதிக்கப்பட்ட எழுத்தாளர்:**

மயக்கவைக்கும் எழுத்துக்கள் என்று வர்ணிக்கப்படும் அளவிற்கு சிறந்த படைப்பாளிதான், இருப்பினும் அவரது சில படைப்புகள் அநாவசியமாக செயற்கையான சர்ச்சைகளுள் செல்கின்றன எனவும், சக படைப்பாளிகள் மற்றும் விமர்சகர்களால் முணுமுணுக்கப்பட்டிருக்கிறது.


இவரது 'சாத்தானின் வேதங்களும்' ஈரானால் கண்டுக்கொள்ளாமல் விடப்பட்டிருந்தால் அவரின் மற்ற நாவல்கள் போல சுமாரான வரிசையில் சேர்ந்திருக்கக்கூடும். தேவையில்லாமல் ஈரானே இலவச விளம்பரம் தந்து உலகம் முழுவதும் இவரே பேசபடும் எழுத்தாளராக்கிவிட்டது. அத்துடன் இந்நூற்றாண்டிலேயே தனது ஒரு நாவலுக்காக "மரண தண்டனை விதிக்கப்பட்ட எழுத்தாளர்" என்கிற வரலாறும் எழுதப்பட்டுவிட்டது.

இவரது படைப்புகளின் உள்ளக தன்மையானது மேற்கத்திய நாடுகளில் பரந்து பட்ட வியாபார நோக்கமாகும் கருத இடமுண்டு. அவர்கள் சொல்லும் இலக்கை நோக்கி எழுதிக் கொண்டிருப்பதாகவும், இவரின் எழுத்தின் வடிவமே எப்போதும் ஏதோ ஒரு வகையில் யாரையும் குற்றம் சாட்டி, கேலி விமர்சனத்தில் வெளிப்படுத்தி கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்ததாகவும் கூறப்படுகிறது.

சல்மான் ருஷ்டியின் படைப்புகளின் மேற்குலக ஊடக வியாபார நோக்கம் கொண்டிருப்பதையும், பெரிய வியாபார ரீதியில் வெற்றி பெற்றதாகவும் கருதப்படுகிறது. இவரது படைப்புகளின் மூலம் பெறப்பட்ட முழுமையான சொத்துக்களின் மதிப்பீட்டால் பெரிய செல்வந்தராக இவரை மாற்றியதாகவும், அமெரிக்காவில் குறிப்பிடத்தக்க சொத்துக்களை வைத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

**பாகிஸ்தான் பூட்டோவை விமர்சித்த 'ஷேம்'நாவல் :**

"ஷேம்" என்ற நாவலில் பாக்கிஸ்தான் பிரதமர் திரு. ஜூல்பிகர் அலி பூட்டோவை அவமதித்தாககூறி பாக்கிஸ்தானில் இவரது நூல் தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஷேம் என்பது சல்மான் ருஷ்டியின் 1983ல் வெளிவந்த நாவல். கடினமான விமர்சன நாவல், அடையாளம் காணக்கூடிய யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பிற்குள் முற்றிலும் இயற்கைக்கு முந்திய நிகழ்வுகளை மறைமுகமாக கூறுவதே 'ஷேம்' நாவலாகும்.






பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர், இந்தியா மற்றும் பாகிஸ்தானின் சுதந்திர நாடுகளாக மத அடிப்படையில் பிரிந்த பிறகு, பாகிஸ்தானில் இஸ்கந்தர் ஹரப்பா - சுல்பிகர் அலி பூட்டோ, மற்றும் ஜெனரல் ராசா ஹைடர் - ஜெனரல் முஹம்மது ஜியா-உல்-ஹக் அவர்களது உறவுகளை இந்நாவல் சித்தரிக்கிறது. "அவமானம்" பெறுவது வன்முறையைப் பிறப்பிக்கிறது என்பதே நாவலின் மையக் கரு.

பாகிஸ்தான் பிரிந்த போது பிந்தைய காலனித்துவ பிரச்சனைகளை அணுகுவதற்கான விருப்பத்தில், பிரிட்டன் இந்தியாவின் கட்டுப்பாட்டை கைவிட்ட பிறகு முஸ்லிம்களை இந்துக்களிடமிருந்து பிரிக்க உருவாக்கப்பட்ட காலத்தில் எழுந்த ஒரு அரசியல் உருவக நாவலாகவும் கருதப்படலாம்.

**இந்திரா காந்தியை விமர்சித்த 'மிட்நைட்ஸ் சில்ட்ரன்' :**

சல்மான் ரஷ்டியின் சாத்தானின் வேதங்கள் தான் சர்ச்சைக்குள்ளானது என்றில்லை அவரது "நள்ளிரவு குழந்தைகள்" என்கிற நாவலில் அப்போதைய இந்திய பிரதமர் திருமதி. இந்திரா காந்தியை, அவசரநிலை பிரகடனத்தின் போது நடந்துகொண்டவற்றிற்காக, சர்வாதிகாரியாகவும், அவர் மகன் சஞ்சய் காந்தியையும் மறைமுகமாக அவமதித்ததாக வழக்கு தொடரப்பட்டு அதற்காக சல்மான் பகிரங்க மன்னிப்பும் கேட்டிருக்கிறார்.

மிட்நைட்ஸ் சில்ட்ரன் படைப்பில் கதா நாயகன் சலீம் சினாய், 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி நள்ளிரவில், ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து இந்தியா சுதந்திரம் பெற்ற சரியான தருணத்தில் தான் பிறந்தார் என்பதை விளக்கி நாவலைத் திறக்கிறார்.

இந்தியா தனது ஆரம்ப காலத்தில் மாநிலங்களில் எதிர்கொள்ளும் கலாச்சார, மொழி, மத மற்றும் அரசியல் வேறுபாடுகள் குறித்து பரந்த பன்முகத்தன்மை கொண்ட தேசம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இந்நாவல்பிரதி பலிக்கிறது.

இந்நாவல் ஏராளமான இடப்பெயர்வுகளை காண்கிறது. மற்றும் துணைக் கண்டத்தை பாதிக்கும் ஏராளமான போர்களைத் தாங்குகிறது. சலீம் பின்னர் இந்திரா காந்தி அறிவித்த எமர்ஜென்சி மற்றும் அவரது மகன் சஞ்சய் ஜமா மஸ்ஜித் சேரியை "சுத்தப்படுத்துதல்" ஆகியவற்றில் ஈடுபட்டார். சிறிது காலம் சலீம் அரசியல் கைதியாக அடைக்கப்பட்டார்.

இந்த நாவலில் அவசரநிலையின் போது இந்திரா காந்தியின் எல்லை மீறல் மற்றும் கடவுளின் எல்லைக்குட்பட்ட அதிகாரத்திற்கான தனிப்பட்ட மோகம் பற்றிய கடுமையான விமர்சனங்கள் உள்ளன. இந்திய துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் கதை நகர்கிறது - காஷ்மீர் முதல் ஆக்ரா மற்றும் பின்னர் பம்பாய், லாகூர் மற்றும் டாக்கா வரை இக்கதையானது இந்திய கலாச்சார வரலாற்றை சொல்கிறது.

**இந்திய வம்சாவளி - பிரித்தானிய எழுத்தாளர்:**

அகமத் சல்மான் ருஷ்டி (ஜூன் 19, 1947) இந்தியாவில் பிறந்த பிரித்தானிய எழுத்தாளர் ஆவார். 1981 இல் வெளிவந்த இவரின் இரண்டாம் புதினம் "மிட்னைட்ஸ் சில்ட்ரென்" காரணமாக இவர் பெரும் புகழுக்கு ஆளானார். இப்புதினம் புக்கர் பரிசு வென்றுள்ளது.

இந்தியச் சூழலில் தனது படைப்புகளை உருவாக்குபவர். கிழக்கு மேற்கு நாடுகளிடையே உள்ள தொடர்புகள், பரஸ்பர தாக்கங்கள், குடிபெயர்வுகள் மற்றும் அதுசார்ந்த பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதுபவர். 1988-ல் வெளிவந்த இவரது 'தி சாட்டனிக் வெர்சஸ்', உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தனது முந்தைய நூல்களைப் போன்றே மாய யதார்த்தவாதத்தை கடைபிடித்து நடப்பு நிகழ்வுகளையும் மனிதர்களையும் அடிப்படையாகக் கொண்டு தனது கதாபாத்திரங்களைப் படைத்துள்ளார்.

இவரது இலக்கிய வகை மாய யதார்த்தவாதம் என்ற தன்மையிலானது.

**த சாத்தானிக் வெர்சஸ் :**

1988இல் இவரின் நான்காம் புதின நாவலான , த சாத்தானிக் வெர்சஸ் வெளிவந்தது. இப்புதினம் இஸ்லாமைப் பழி தூற்றுகிறது என்று கூறி உலகில் பல முஸ்லிம்கள் ருஷ்டியுக்கு எதிராகப் போராட்டம் செய்துள்ளனர். ஈரானின் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி ருஷ்டியை கொலை செய்யவேண்டும் என்று பெப்ரவரி 14, 1989 அன்று ஒரு உத்தரவு பிறப்பித்தார். ருஷ்டியின் தலைக்கு கோடிக்கணக்கில் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டது. அதன்பின் இங்கிலாந்து அரசு இவருக்கு அடைக்கலம் அளிக்க முன்வந்தது. இதனால் ருஷ்டிக்கு பிரித்தானிய காவல்துறை பாதுகாப்பு கொடுத்தது.

இந்நாவல் முஸ்லிம்களின் மத நம்பிக்கைகளைப் புண்படுத்தும் வகையில் இருப்பதாகக் கூறி, உலகின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஜப்பான் மொழியில் இந்த நாவலை மொழிபெயர்ப்பு செய்த ஒருவர் 1991-ல் கொலை செய்யப்பட்டார். இஸ்லாமிய நாடுகள் அந்த புத்தகத்திற்கு தடை விதித்தது. இந்த புத்தகத்திற்கு இந்தியாவில் இப்போதும் தடை நீடிக்கிறது.

அதிக முஸ்லிம் மக்கள்தொகை கொண்ட பல நாடுகளில் தடைசெய்யப்பட்ட இந்நாவல், ஆயினும் ஐக்கிய இராச்சியத்தில் இந்த நூலிற்கு நேர்மறையான மதிப்புரைகள் கிடைத்தன. 1988 ஆம் ஆண்டுக்கான புக்கர் பரிசு இறுதிப் பட்டியலில் இடம்பெற்று பரிசு பெறா விடினும் அவ்வாண்டு விட்பிரெட் பரிசைப் பெற்றது.

**இலக்கியச் சேவைக்காக "சேர்"பட்டம்:**

1981-ல் வெளிவந்த இவரது 2-வது புதினம் 'மிட்நைட்ஸ் சில்ட்ரன்' உலக அளவில் பிரபலமாகி, அவரை புகழின் உச்சிக்கு கொண்டுசென்றது. இந்த நாவல் புக்கர் பரிசையும் வென்றது. இதன் பிறகு 1983-ல் 'ஷேம்' என்ற நாவலை எழுதினார். இலக்கிய சேவைகளுக்காக இவருக்கு 2007-ல் 'சேர்' பட்டம் வழங்கப்பட்டது.

பிரான்ஸின் கலை மற்றும் எழுத்துக்கான கவுரவ அமைப்பில் இவருக்கு கௌரவ பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. 2008-ல் அமெரிக்கன் அகாடமி ஆஃப் ஆர்ட்ஸ் அண்ட் லெட்டர்ஸ் அமைப்பின் வெளிநாட்டு கவுரவ உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1945-க்குப் பிறகு உள்ள 50 தலைசிறந்த எழுத்தாளர்கள் வரிசையில் இவருக்கு 13-வது இடத்தை 'தி டைம்ஸ்' நாளிதழ் வழங்கியது. 2005-ல் இவரது 'ஷாலிமார் தி கிளவுன்' நாவலுக்கு இந்தியாவின் மதிப்புமிக்க 'ஹட்ச் கிராஸ்வேர்டு புக்' விருது கிடைத்தது.

ஐரோப்பிய யூனியன், இத்தாலி, ஜெர்மனி என உலகம் முழுவதும் பல்வேறு கவுரவமிக்க விருதுகளைப் பெற்றுள்ளார். அத்துடன் ஹாலிவுட் படங்களில் தோன்றுவதாக குழந்தைப் பருவத்திலிருந்தே கனவு காண்பது உண்டு. எழுத்தாளனாக வெற்றி பெறாமல் இருந்திருந்தால் நடிகனாகி இருப்பேன்' என்பார்.

அவரது கனவு ஓரளவு நிஜமாகியுள்ளது. இவரது சில படைப்புகள் திரைப் படங்களாகவும் தொலைக் காட்சி தொடராகவும் வெளிவந்தன. சில படங் களில் கவுரவத் தோற்றத்தில் நடித்துள்ளார். 75 வயதாகும் சல்மான் ருஷ்டி தற்போதும் எழுதிவருகிறார் என்பது கவனத்துக்கு உரியது.



# சீனாவின் யுவான் வாங்-5, இந்தியாவின் துருவ்:

## எந்த கண்காணிப்பு கப்பலுக்கு வலிமை அதிகம்?

**- பரணிதரன்**

இந்தியப் பெருங்கடல் பகுதியில் முன்னெப்போதும் இல்லாத வகையில் சீன செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான யுவான் வாங்-5 வந்திருப்பது, அண்டை நாடான இந்தியாவில் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது.

இந்த கப்பலால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் உள்ளதா என்ற கேள்விக்கு நேரடியாக பதில் தருவதை இந்திய வெளியுறவுத்துறை தவிர்க்கிறது. அதே சமயம், சீன கப்பலின் தன்மையைக் கருத்தில் கொண்டு அதை ஒருவித சந்தேக பார்வையுடனேயே இந்திய உளவு அமைப்புகள் கவனித்து வருகின்றன.

இந்த சீன கப்பல் பற்றி சமீப வாரங்களில் மிக அதிகமாகவே சர்வதேச ஊடகங்களும், இந்திய, இலங்கை ஊடகங்களும் செய்திகளையும் தகவல்களையும் வெளியிட்டுள்ளன. உண்மையில் அந்த கப்பலில் எத்தகைய வசதிகள் உள்ளன என்பதும், அதன் அறிவியல், தொழில் நுட்ப திறன்களும் முழுமையாக அறியப்படவில்லை.

சீன கப்பலுக்கு நிகரான வசதிகளை கொண்ட கப்பல் இந்தியாவிலும் உள்ளதா என்று பலரும் சமூக ஊடகங்களில் தேடத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்கு விடை பகுதியளவில் "ஆமாம்" என்பதே. ஆனால், அந்த கப்பல் பற்றிய தகவல்கள் பொதுவெளியில் அதிகமாக இல்லை.

சீனாவில் "செயற்கைக்கோள் கண்காணிப்பு மற்றும் ஆய்வுக் கப்பல்" என்ற பெயரில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள "யுவான் வாங்-5" கப்பல், செயற்கைக் கோள்களை கண்காணிக்கும் திறனையும் ஏவுகணையை ஏவும் வசதியையும் கொண்டுள்ளது.

அதுபோல, இந்தியாவில் கடந்த ஆண்டு கடற்படை சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்ட கப்பலின் பெயர் துருவ். இது கடல் பகுதியில் இருந்தபடி இந்தியாவை நோக்கி வரும் ஏவுகணைகளை முன்கூட்டியே கண்காணித்து போர் கப்பல்களை எச்சரிக்கும் திறன் கொண்டுள்ளது.

மேலும், இந்திய வான்பரப்பில் உள்ள செயற்கைக்கோள்கள், இந்தியாவை நோக்கி நடக்கும் வான் கண்காணிப்புகளை கண்டறிந்து இந்திய விண்வெளித் துறையையும் பாதுகாப்பு ஆராய்ச்சித்துறையையும் எச்சரிக்கும் வகையில் துருவ் தயாரிக்கப்பட்டுள்ளது.

**பல வடிவங்களில் யுவான்வாங் கப்பல்கள்**

யுவான்வாங் என்ற சொல்லுக்கு சீன மொழியில் "நீண்ட பார்வை" அல்லது "தூர நம்பிக்கை" என்று பொருள் கூறப்படுகிறது. யுவான்வாங் என்பதற்கு நீடித்த ஆசை என்ற பொருளும் இருக்கிறது. சீன அரசாங்கம், கடல்சார் வான்பரப்பை கண்காணிக்கும் கப்பல்களுக்கு யுவான் வாங் என்று பெயர் சூட்டியிருக்கிறது. அந்த வகையில் யுவான் வாங் ரகத்தில் நான்கு கப்பல்களை சீனா வைத்துள்ளது. ஒவ்வொரு கப்பலிலும் வெவ்வேறு டிஷ்களுடன் இணைக்கப்பட்ட செயற்கைக் கோள் கண்காணிப்பு ஆன்டனாக்கள், ராடார் மற்றும் ஸ்கேனர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. யுவான்வாங் 3, யுவான்வாங் 5, யுவான்வாங் 6, யுவான் வாங் 7 என அந்த கப்பல்கள் குறிப்பிடப்படுகின்றன.

உலக அளவில், சீனா, அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளிடம் மட்டுமே இதுபோன்ற செயற்கைக் கோள் கண்காணிப்பு மற்றும் விண்வெளி ஆய்வுக்கப்பல்கள் உள்ளன. அமெரிக்காவிடம் இதுபோல 23 கப்பல்கள் உள்ளன.



சீனா விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ஷென்சோ விண்வெளி திட்டத்தின் அங்கமாக அதன் விண்வெளி வீரர்களுக்கு உதவியாக யுவான்வாங் கப்பல்களை உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்புவதற்காக வடிவமைத்துள்ளதாக அந்நாட்டு அரசு கூறுகிறது. அந்த வகையில், 1977ம் ஆண்டிலேயே இந்த ரக கப்பல்கள் தயாரிக்கப்பட்டாலும், அவை தமது சொந்த கடல் பரப்பைத் தாண்டி பிற கடல் பிராந்தியங்களில் இருந்து கொண்டு சர்வதேச செயற்கைக்கோள் ஏவும் திட்டத்தை கண்காணிக்க 1986க்குப் பிறகு பயன்படுத்தப்பட்டன. அப்போது யுவான்வாங் 1, 2 ரக கப்பல்கள் பயன்பாட்டில் இருந்தன.

1995இல் யுவான்வாங் 3 ரகத்தில் இரண்டு கப்பல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. இதன் பிறகு 1999இல் யுவான்வாங் 4 கப்பல் சீன செயற்கைக் கோள் ஏவும் திட்டத்தை கண்காணிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 2007இல் யுவான் வாங் ரகத்தில் மேலும் இரண்டு கப்பல்கள் தயாரிக்கப்பட்டன. இந்த வரிசையில் யுவான்வாங் 5 மற்றும் 6 ரக கப்பல்கள் ஷென்சோ திட்டத்துக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு பெருங்கடல்களின் வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அந்த வகையில், யுவான் வாங் கண்காணிப்பு கப்பல்கள் "மூன்று பெருங்கடல்களுக்கு" செயற்கைக்கோள் ஏவுதலுக்கு முந்தைய பரிசோதனை முறையிலான ஆய்வுப் பணிகளுக்கு உதவ அனுப்பப்படுகின்றன.

**கடல் எல்லைகளைக் கடக்கும் யுவான்வாங் கப்பல்கள்**

குறிப்பாக, மேற்கு பசிஃபிக் பெருங்கடல், தெற்கு பசிஃபிக் பெருங்கடல், ஆஸ்திரேலியாவின் மேற்கு இந்திய பெருங்கடல், தெற்கு அட்லான்டிக் பெருங்கடல் ஆகியவற்றுக்கு இந்த கப்பல்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த ரக கப்பல் முதல் முறையாக 1999ஆம் ஆண்டு நம்பரில் பெருங்கடல்களுக்கு செலுத்தப்பட்டன. அப்போது அதன் முதலாவது, இரண்டாவது வரிசைகள் பசிஃபிக் கடலுக்கு அனுப்பப்பட்டன. யுவான்வாங் 4 ரக கப்பல் இந்திய பெருங்கடலுக்கும் ஆஸ்திரேலியாவின் ஃப்ரெமான்டல் துறைமுகத்துக்கும் அனுப்பப்பட்டது. யுவான்வாங் 3 ரக கப்பல், டர்பனுக்கும் பிறகு அங்கிருந்து அட்லான்டிக் கடல் பகுதிகளுக்கும் அந்த கப்பல் செலுத்தப்பட்டது.


இதில் யுவான்வாங் 4 கப்பல், 2007 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்தபோது அதன் மீது நிலக்கரி ஏற்றி வந்த சரக்கு கப்பல் ஒன்று மோதியது. அதில் ஏற்பட்ட தீ விபத்துக்குப் பிறகு அது பயிற்சிக்கான இலக்கு கப்பலாக மாற்றப்பட்டது. 2010 இல் நடந்த சோதனையின்போது ஜியாங்யின் துறைமுக தளத்தில் நிறுத்தப்பட்டிருந்தபோது டிஎஃப்21 பாலிஸ்டிக் ஏவுகணை கப்பலில் இருந்து செலுத்தப்பட்ட ஏவுகணையின் மூலம் இலக்கு கப்பல் தாக்கி அழிக்கப்பட்டது.

முன்னதாக, 2007இல் யுவான்வாங் 5 மற்றும் யுவான்வாங் 6 ரக மூன்றாம் தலைமுறைக்கான கப்பல்களை சீன கப்பல் கட்டுமான தொழில் கழகம் உருவாக்கியது. இதில் யுவான்வாங் 5 ரக கப்பல் செயற்கைக் கோள்களை கண்காணிக்கவும் தேவைப்பட்டால் ஏவுகணை செலுத்தும் கப்பலாக இயங்கும் வகையிலும் வடிவமைக்கப்பட் டது. யுவான்வாங் 6 ரக கப்பல், இன்டர்நெட் சேவைக்கு பயன் படும் கடலடி கண்ணாடி இழை வடம் அமைப்புப் பணிகளை மேற்பார்வையிட வும் அதன் கசிவுகளை தடுக்கும் திறன்களு டனும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கப்பலில் இருந்து சுமார் மூன்று லட்சம் பேர் வரை வசிக்கக் கூடிய நகருக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

இந்த வரிசையில் யுவான்வாங் 7, யுவான்வாங் 21, 22 ஆகிய கப்பல்கள் உள்ளன. அவை சீன செயற்கைக்கோள் கடல்சார் கண்காணிப்புத்துறையால் நிர்வகிக்கப்படுகின்றன. யுவான்வாங் 21, 22 போன்ற கப்பல்கள், சீனாவின் லாங்மார்ச் ராக்கெட்டுகளை சுமந்து வர பயன்படுத்தப்பட்டாலும், அவற்றின் நடமாட்டம் மற்றும் சேவைகள் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

**நோக்கம் என்ன?**

இதில், சீனாவின் யுவான் வாங்-5 செயற்கைக்கோள் கண்காணிப்பு மற்றும் ஆய்வுக் கப்பல்தான் இப்போது, இலங்கையின் சீன நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் தற்போது நங்கூரமிட்டுள்ளது. அங்கு அந்த கப்பலுக்கு எரிபொருள் நிரப்பவும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஒரு வார காலத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.



இதன் நீளம் 220 மீட்டர். அகலம் 25.2 மீட்டர். 25 ஆயிரம் டன் பொருட்களை கையாளும் திறன் கொண்ட இந்த கப்பலால் அதிகபட்சமாக மணிக்கு 37 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லமுடியும். பல கப்பல்களில் இடம்பெற்ற வடிவங்களை ஒருசேர தன்னுள் கொண்டதாக இந்தக் கப்பல் இருக்கிறது.

சீனா சமீபத்திய மாதங்களிலோ வாரங்களிலோ ஷென்ஸோ ரக ராக்கெட்டுகளை விண்வெளிக்கு செலுத்தாத நிலையில், இந்த யுவான்வாங் 5 ரக கப்பல் எந்த நோக்கத்துக்காக பெருங்கடல் பயணத்தை மேற்கொண்டுள்ளது என்பதை சீனா விளக்கவில்லை. இது அடிப்படையில் ஒரு போர் கப்பல் கிடையாது. ஆனால், போர் கப்பல்களுக்கு மூளையாகவும் தொழில்நுட்ப ஆற்றலை வழங்கக் கூடியதாகவும் திகழ்கிறது.

அந்த நாட்டைப் பொறுத்துவரை, இதுவொரு வழக்கமான பரிசோதனை அளவிலான கடல் வழி பயணம் என்றே ஆரம்பம் முதல் கூறப்படுகிறது.

**இந்தியாவின் துருவ் - சிறப்பம்சங்கள் என்ன?**

சீனாவிடம் யுவான்வாங் தொடர்களில் பல வகை கப்பல்கள் இருந்தாலும், இந்தியாவில் அதன் பாதுகாப்பு தேவைக்காக செயற்கைக்கோள் மற்றும் ஏவுகணை தாக்குதல் எச்சரிக்கும் சாதனங்கள் பொருத்தப்பட்ட ஒரே கப்பலாக "ஐஎன்எஸ் துருவ்" உள்ளது.

இந்த கப்பல் 2021ஆம் ஆண்டு செப்டம்பரில்தான் நாட்டுடைமையாக்கப்பட்டது. இது முழுக்க இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனமான டிஆர்டிஓ, இந்திய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனமான என்டிஆர்ஓ ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஹிந்துஸ்தான் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் கட்டியெழுப்பப்பட்டது.

விசாகப்பட்டினத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்த கப்பல், இந்திய கடற்படை சேவைக்காக இயக்கப்படுகிறது. அங்குதான் இதன் இயங்குதளமும் கட்டுப்பாட்டு மையமும் உள்ளது. இந்த கப்பலை இந்திய கடற்படை, என்டிஆர்ஓ, டிஆர்டிஓ ஆகியவற்றைச் சேர்ந்த கூட்டுக்குழு இயக்கி வருகிறது.

இந்த கப்பலில் டிஆர்டிஓ உருவாக்கிய அதிநவீன ரேடார் (ஏஇஎஸ்ஏ) சாதனங்கள் உள்ளன. இது பல்வேறு அலைவரிசைகளை ஸ்கேன் செய்யவும், இந்தியாவை கண்காணிக்கும் உளவு செயற்கைக்கோள்களை கண்காணிக்கவும் இந்தியாவின் கடல் பிராந்தியத்தில் நடத்தப்படும் ஏவுகணை சோதனைகளை கண்காணிக்கவும் உதவுகிறது.

ஐஎன்எஸ் துருவ் என அழைக்கப்படும் இந்த கப்பல், அணு ஆயுத ஏவுகணைகளை நீண்ட தூரத்தில் கண்காணிக்கும் திறன் கொண்டது. இது இந்திய பசிஃபிக் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் அணுசக்தி பாலிஸ்டிக் ஏவுகணை அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிரி நீர்மூழ்கிக் கப்பல்களை கண்காணித்து கடற்படையை எச்சரிக்கவும் கடல் படுகைகளை வரைபடமாக்கும் திறனையும் துருவ் கொண்டுள்ளது.

சென்சார்கள் நிரம்பிய மூன்று குவிமாட வடிவ ஆன்டெனாக்களின் சிறப்பு கண்காணிப்பு அமைப்புகளைக் கொண்டுள்ள இந்த கப்பலின் எடை 5,000 டன் ஆகும். முதல் முறையாக இந்த கப்பலின் திறன் 2018ஆம் ஆண்டில் விரிவாக சோதிக்கப்பட்டது.

இந்த கப்பலில் இருந்து 14 மெகா வாட் மின் சக்தியை தயாரிக்க முடியும். இது எதிரி ஏவுகணைகளை கண்காணிப்பதுடன், உள்நாட்டில் நடத்தப்படும் ஏவுகணைகளின் வழக்கமான சோதனை களின் தரவை துல்லியமாக வழங்குவதற்கும் உதவுகிறது.

இந்திய பிரதமர் நரேந்திர மோதியின் மேக் இன் இந்தியா திட்டத்தின்படி இந்த கப்பல் உருவாக்கப்பட்டுள்ளதாக இந்திய கடற்படை கூறுகிறது. இந்த திட்டத்துக்காக ரூ.725 கோடி வரை செலவிடப்பட்டதாக கூறப்பட்டாலும், அது பற்றிய அலுவல்பூர்வ தகவல்களை இந்திய அரசு இதுவரை வெளியிடவில்லை.

இத்தகைய வசதிகளுடன் கூடிய கப்பல்கள் அமெரிக்கா, பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளிடம் மட்டுமே உள்ளன.



ஒப்பீட்டளவில் சீனாவின் யுவான்வாங் தொடர் வரிசை கப்பல்களுக்கு இது நிகரில்லை என்றாலும் தற்போது இலங்கை வந்துள்ள யுவான்வாங் 5 ரக கப்பலில் உள்ள அதே நவீன செயற்கைக்கோள், ஏவுகணை கண்காணிப்பு வசதிகளை துருவ் கப்பல் கொண்டுள்ளது. துருவ் ஒரு போர் கப்பல் கிடையாது. அது போர் கப்பல்களுக்கும் இந்திய பாதுகாப்புத்துறைக்கும் உதவும் வகையிலான தொழில்நுட்ப ஆதாரவை மட்டுமே வழங்கும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல் **(30 புள்ளிகள்)**

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

**19.08.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**19.08.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்க பல்கலைக்கழகத்தில் வாய்ப்புக்கள் அதிகம்

## துணைவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்

அம்பாறை, ஓக.19

**மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்தவும், எதிர்காலத்தை வடிவமைக்கவும் வாழ்க கையின் அனைத்து அம்சங்களுக்கும் பல்கலைக்கழகத்தில் அதிக வாய்ப்புகள் வழங்கப்படுவதாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.**



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பதவியேற்று ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மாணவர் செயற்பாட்டு மையத் திறப்பு விழா நேற்று முன் தினம் புதன்கிழமை பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மையத்தினைத் திறந்து வைத்தார்.

சகல வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்பட்டுள்ள மாணவர் செயற்பாட்டு மையத்தில் இளம்கலை மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன், தொழில் வழிகாட்டல் அலகு, சமூக நல்லிணக்க மையம், மாணவர் பிரத்தியேக நூலகம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் நிதிப்பங்களிப்புடன் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்திற்கு 120 மில்லியன் ரூபாய் நிதியுதவி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் மாணவர் மையத்திற்கு சுமார் 15 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்:

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மிகப்பெரிய தேவைகளில் ஒன்று கவர்ச்சிகரமான ஆராய்ச்சி சூழலுடன் கூடிய இடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி இவ்வாறானதொரு கட்டடத்தை நிர்மாணிக்க முயற்சித்தோம். இன்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு காண்பதில் ஒட்டுமொத்த பல்கலைக்கழக சமூகம் மிகுந்த மகிழ்ச்சியடைகிறது .

இது ஒரு தனித்துவமான தோற்றத்தைக் கொண்டுள்ளது. நிச்சயமாக வளாகத்தின் அடையாளமாக மாறும். மாநாடு மற்றும் கருத்தரங்குகளுக்கான விரிவான வசதிகளைக் கொண்டுள்ளது.

இக்கட்டடத்திலிருந்து பல புதிய அற்புதமான முடிவுகள் வெளிவரும். இது பல்கலைக்கழகத்தின் முக்கியமான கூறுகளில் ஒன்றாக விரைவில் மாறும்.

உயர்கல்வி அமைச்சும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இணைந்து உலக வங்கி மூலம் இக்கட்டடத்தின் கட்டுமானத்திற்கும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. முதல் பிரிவு, சிறப்பு கல்வி தேவைகளில் நிபுணத்துவம் பெற்று இத்துறையில் ஆராய்ச்சி செய்யும் முறை மேற்கொள்ளப்படும்- என்றார். (அ)

# சபீனா முஸ்லிம் வித்தியாலயத்துக்கு பல்லூடக உபகரண தொகுதி வழங்கல்

அம்பாறை, ஓக. 19



காரைதீவு கோட்ட மாளிகைக்காடு கல்முனை சபீனா முஸ்லிம் வித்தியாலய மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீன தொழில்நுட்பத்தினூடாக முன்னெடுப்பதற்கு, பாடசாலையின் முக்கிய தேவையாக இருந்த பல்லூடக உபகரணத்தொகுதியை பாடசாலையின் ஆசிரியை திருமதி ஜே. இஸ்மாலெப்பையின் முயற்சியினால் அமெரிக்காவில் தொழில் புரியும் பொறியியலாளர் ஐ.எல்.எம் நிப்ராஸ் அண்மையில் அன்பளிப்பு செய்தார்.

உபகரணத்தொகுதி நேற்று ஆசிரியை திருமதி ஜே. இஸ்மாலெப்பையால் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். அஸ்மியிடம் மாணவர் பாவனைக்காக பாடசாலையில் வைத்து கையளிக்கப்பட்டது. (அ)

# தவிசாளரின் விடாமுயற்சியினால் விவசாயிகளுக்கு பசளை வழங்கல்

திருமலை, ஓக. 19



திருகோணமலை - புல்மோட்டை கமநல சேவை நிலையத்தில் ஆண்டாங்குள விவசாயிகளுக்கென களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பசளைகளை பிறிதொரு பிரதேசத்துக்கு வழங்க திட்டமிடப்பட்டிருந்த செயற்பாட்டை குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தலையிட்டு உடனடியாக தடுத்து நிறுத்தி பசளைகளை ஆண்டாங்குள விவசாயிகளுக்கு வழங்கினார்.

புல்மோட்டை கமநல சேவை நிலையத்தினால் இந்த விடயம் முன்னெடுக்கப்படுவதை அறிந்துகொண்ட ஆண்டாங்குள விவசாயிகள் குறித்த விடயத்தை குச்சவெளி பிரதேச சபை தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கமநல திணைக்கள ஆணையாளரை தொடர்பு கொண்டு ஆண்டங்குள விவசாயிகளின் நிலைமையை தெளிவுபடுத்திய பின்னர் மாவட்ட கமநல உதவி ஆணையாளரின் பணிப்புரைக்கமைவாக ஆண்டாங்குள விவசாயிகளுக்கு உரிய பசளைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்தின் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஓக. 19



ஈழமணித் திருநாட்டின் கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புடையதும் தொண்மை வாய்ந்ததுமான மகா துறவி சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மட்டக்களப்பு கல்லடி ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெரு விழா நேற்று முன் தினம் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு அரசடியில் உள்ள சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் இருந்து கொடிச்சீலை திருச்செந்தூர் முருகன் ஆலயத்தினை வந்தடைந்ததும் விசேட யாக பூசைகள் இடம்பெற்று, ஆலயத்தில் மூலமூர்த்திக்கு அபிசேக ஆராதனைகள் இடம்பெற்றதனைத் தொடர்ந்து கொடியேற்றம் இடம்பெற்று, விசேட ஆராதனைகள் மற்றும் கொடிக்கம்ப அபிசேக ஆராதனைகள் என்பன நடைபெற்றன.

கொடியேற்றத்தினை தொடர்ந்து முதல் எட்டு நாட்கள் திருவிழாவில் நாளாந்தம் சுவாமி உள்வீதி வெளிவீதியுலா என்பன இடம்பெற்று, ஒன்பதாம் நாளாகிய 25 ஆம் திகதி வியாழக்கிழமையன்று பி.ப 3.00 மணியளவில் தேர்த்திருவிழாவும் பத்தாம் நாளாகிய 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வங்கக் கடலில் சமுத்திர தீர்த்தோற்சவம் இடம்பெற்று இவ்வாண்டிற்கான மஹோற்சவ பெருவிழா இனிதே நிறைவடையவுள்ளது.


இலங்கைத் திருநாட்டில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் தமிழ் மொழியில் வேத பாராயணங்கள் ஓதப்பட்டு முருகப் பெருமானிற்கு பூசை வழிபாடுகள் இடம்பெறும் ஒரேயொரு ஆலயமாக இவ்வாலயம் திகழ்வதும், இந்தியாவின் புகழ்பூத்த முருகன் ஆலயமான திருச்செந்தூர் ஆலயத்தினை நோக்கியதாக இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதும் சிறப்பம்சமாகும். (அ)

# வீதியை விட்டு விலகியதால் விபத்துக்குள்ளான வாகனம்

திருமலை, ஓக. 19

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள திருகோணமலை - சீனக்குடா விமானப்படைத் தளத்துக்கு அருகில் உள்ள வளைவொன்றில் கப் ரக வாகனமொன்று, பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளானது.

வாகனச் சாரதியின் கவனயீனத்தால் நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த விபத்தில் சாரதி சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.



விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(அ)

# மனிதரிலிருந்து நாய்க்கும் தொற்றியது குரங்கு அம்மை!

பாரிஸ், ஓக. 19

"குரங்கு அம்மை நோயாளிகள் இருவரின் வளர்ப்பு நாய்க்கும் அந்த வைரஸ் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குரங்கு அம்மை வைரஸ் மனிதரில் இருந்து விலங்குகளுக்கு - குறிப்பாக நாய்க்கு தொற்றியிருப்பது இதுவே முதன் முறை என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

தொற்றாளர்கள் வளர்ப்புப் பிராணிகளிடம் இருந்தும் ஏனைய விலங்குகளிடம் இருந்தும் முற்றாக விலகி இருக்குமாறும் அந்த அமைப்பு கேட்டுள்ளது.

பொதுவாக வைரஸ் இனங்கள் விலங்குகளில் தொற்றுகின்ற போது ஆபத்தான புதிய பிறழ்வுகளாக - திரிபுகளாக மாறுகின்றன. எனவே விலங்குகள் குறித்த விழிப்பு அவசியம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

வைரஸ் புதியதொரு வாழ்க்கைச் சூழலுக்கு மாறும்போது அதற்கு ஏற்ப அது புதிய இனமாகத் தன்னை மாற்றிக் கொள்கிறது. வைரஸ் வீட்டு விலங்குகளைவிட வெளியே ஏனைய உயிரினங்களில் தொற்றுவதே மிக ஆபத்தானது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வசிக்கின்ற ஆண் ஒரினச் சேர்க்கத் தம்பதிகள் இருவரது இத்தாலி இனத்தைச் சேர்ந்த நாய் ஒன்றுக்கே குரங்கு அம்மை வைரஸ் தொற்றியுள்ளது.

அவர்கள் இருவரும் கடந்த ஜூனில் தொற்றுக்கு இலக்காகி இருந்தனர். உலகின் பல நாடுகளில் குரங்கு அம்மை இதுவரை 31,600 பேருக்குத் தொற்றியுள்ளது. 12 பேர் அதனால் உயிரிழந்தனர். (ஐ)

# கடும் வறட்சியை சமாளிக்க மழையை தூண்டுகிறது சீனா!



ஹூபே மாகாணத்தில் மலைப் பகுதியிலிருந்து மழையை தூண்டும் இரசாயன ஏவுகணை ஏவப்படுகிறது...!

பிஜிங், ஓக. 19

**சீனாவின் மத்திய மற்றும் தென்மேற்கு பகுதிகளில் கடும் வறட்சி நிலவுகிறது. அங்கு தொடரும் வெப்ப அலைக்கு மத்தியில் மழையை பெய்விப்பதற்கு சீன அதிகாரிகள் முயல்கின்றனர்.**

இந்த வறட்சியால் ஆசியாவின் மிக நீளமான நதியான யாங்சேயின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. சில பகுதிகளில் வழக்கத்திலும் பார்க்க அரைப்பங்குக்கும் குறைவான மழை பெய்கிறது.

நீர் தேக்கங்கள், நீர் வீழ்ச்சிகளில் தண்ணீர் குறைந்ததால் நீர் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், அந்த மாநிலங்களை மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு அரசு அறிவித்துள்ளது.

குளிரூட்டிகளை 26 பாகை செல்சியஸில் வைக்குமாறு, தானியங்கி படிகளை (லிப்ட்) பயன்படுத்துவதை தவிர்க்குமாறும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இரு மாதங்களாக தொடரும் இந்த வெப்ப அலை சீனாவில் மிக நீண்ட வெப்ப அலை என்று பதிவாகியுள்ளது.

இந்நிலையிலேயே, ஹூபே மற்றும் பல மாகாணங்கள் மழையை தூண்டும் இரசாயனங்கள் (யூரியா - அமோனியம் நைதரேற் கலந்தது) ஏவுகணைகளை விண்ணில் ஏவியுள்ளன என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. எனினும், மேக மூட்டங்கள் இல்லாததால் சில இடங்களில் இந்தப் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மின் உற்பத்தி பாதிப்பால் பல இலட்சம் மக்கள் இருளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இதேசமயம், சீனாவின் மேற்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி 16 பேர் உயிரிழந்தனர். 36 பேர் காணாமல் போயுள்ளனர் என்று அந்த நாட்டின் அரச ஊடகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# அல்ஜீரியாவில் காட்டு தீ; 26 பொதுமக்கள் மரணம்!



அல்ஜீரிஸ், ஓக. 19

அல்ஜீரியாவின் வடக்கு பகுதியில் ஏற்பட்ட காட்டு தீயில் குறைந்தது 26 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர் என்று அந்நாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாக கண்டத்தை அண்மைநாட்டுகளாக காட்டுத் தீ பெரும் அழிவை ஏற்படுத்தி வருகின்றது. இந்த காட்டுத் தீ அல்ஜீரியாவிலும் பரவ வருகிறது. இந்தத் தீயைக் கட்டுக்குள் கொண்டு வர தீயணைப்பு வீரர்கள் பல முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

பல்வேறு பகுதிகளிலிருந்தும் 350 குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்தப் பகுதிகளில் பல வீடுகள் மற்றும் சொத்துகள் அழிவடைந்துள்ளன.

அல்ஜீரியா ஒவ்வோர் ஆண்டும் காட்டு தீயால் பாதிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு ஏற்பட்ட தீயால் 90 பேர் உயிரிழந்தனர். ஒரு இலட்சம் ஹெக்ரெயர் காட்டு நிலங்கள் அழிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆப்கானில் குண்டுவெடிப்பு; 30 இற்கும் மேற்பட்டோர் பலி!

காபூல், ஓக. 19

ஆப்கானிஸ்தானின் மசூதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் 30இற்கும் அதிகமானோர் பலியாகினர்.



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள பிரபல மசூதியில் மாலை தொழுகை நடந்து கொண்டிருந்தபோது இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

இந்த குண்டுவெடிப்பில் 30இற்கும் மேற்பட்டோர் பலியான நிலையில், படுகாயமடைந்தவர்களை மீட்பு படையினர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் இதனால், இறப்பு எண்ணிக்கை வாய்ப்புள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி ஓராண்டு நிறைவு பெற்றுள்ள நிலையில், இந்த குண்டு வெடிப்பு சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கட்டுப்பாடுகளைப் பின்பற்றுங்கள் உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்து

ஜெனிவா, ஓக. 19

"கொரோனா தொற்றால் ஒரு வாரத்தில் உலகம் முழுவதும் 15 ஆயிரம் பேர் மரணித்தனர். எம்மிடம் தடுப்பு முறைகள் பல இருந்தும் இத்தனை உயிரிழப்பு என்பதை எவ்வகையிலும் ஏற்க முடியாது.

கடந்த 4 வாரங்களில் இறப்பு விகிதம் 35வீதம் அதிகரித்துள்ளது.", என்று கூறியுளார உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரியேசஸ்.

அத்துடன், கொரோனா தொற்று பரவி மூன்றாண்டுகள் கடந்துவிட்ட நிலையில், கொரோனாவுடன் வாழ வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். கொரோனாவுடன் வாழும்போது நாம் இதுவரை கடைபிடித்து வந்த முகக்கவசம் அணிதல், கைகளை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், கூட்டங்களை தவிர்த்தல், சமூக இடைவெளியை கடைபிடித்தல் ஆகியனவற்றை கைவிடக் கூடாது.

இவை நமக்கான பாதுகாப்பு மட்டுமல்ல நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குமான பாதுகாப்பும் கூட என்றும் கூறியுள்ளார்.

மேலும், நாம் எல்லோரும் கொரோனா வைரஸ் பரவலால் சோர்ந்துவிட்டோம். பெருந்தொற்று காலம் நீண்டுகொண்டே செல்வதால் சோர்வடைந்துள்ளோம். ஆனால், வைரஸ் சோர்வடையவில்லை. அதனால், நாம் தடுப்பு நடவடிக்கைகளைக் கைவிடக் கூடாது.

நாம் தப்பிப்பிழைக்க வழியில்லாமல் இல்லை. தயவு செய்து நீங்கள் இன்னும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை என்றால் உடனே தடுப்பூசி செலுத்திக் கொள்ளுங்கள். இரண்டு தவணை செலுத்திவிட்டிருந்தால் பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொள்ளுங்கள். முகக்கவசம் அணியுங்கள். சமூக இடைவெளியைக் கடைபிடியுங்கள். ஒவ்வொரு வாரமும் 15 ஆயிரம் உயிரிழப்புகள் ஏற்படுகிறது என்றால் நாம் வைரஸோடு வாழ்வதாகாது என்று அவர் கூறியுள்ளார். (ஐ)



நரி ஒன்று தனது மறைவான இருப்பிடத்துக்குள் நுழையும் காட்சி. இது "ரிமோட்" முறை "கமெரா" மூலம் படம்பிடிக்கப்பட்டது. இந்த நுட்பம் மூலம் வன உயிர்களின் வாழ்வு உலக மக்களை சென்றடைய பெரிதும் உதவியது.

ஒகஸ்ட் 19 ஆன இன்று உலக ஒளிப்பட தினமாகும் இதையொட்டி இந்த ஒளிப்படம் பிரசுரமாகிறது.



# மேற்கிந்திய போட்டிகளில் சமரி அத்தப்பத்துக்கு இடம்!

கிங்ஸ்ரன், ஓக. 19

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள 6(சி)க்ஸ்ரி (பத்து -10) மற்றும் கரீபியன் பிறீமியர் லீக் இருபது - 20 தொடர்களில் இலங்கை மகளிர் அணித் தலைவி சமரி அத்தப்பத்து விளையாடவுள்ளார்.

இந்த இரண்டு வகை சுற்றுப் போட்டிகளில் விளையாடுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட 9 வெளிநாட்டு வீராங்கனைகளில் சமரி அத்தப்பத்துவும் ஒருவராவார்.

மகளிர் சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை சார்பாக அதிக ஓட்டங்களைப் பெற்றுள்ள சமரி அத்தப்பத்து, இரண்டு வகை கிரிக்கெட் போட்டிகளிலும் கயானா அமேஸன் வோரியர்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார்.

98 மகளிர் சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி 96 இனிங்ஸ்களில் சமரி அத்தப்பத்து ஒரு சதம், 5 அரைச் சதங்கள் அடங்கலாக 2,079 ஓட்டங்களை மொத்தமாக பெற்றுள்ளார்.

கிட்டத்தட்ட 200 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளை



யாடியுள்ள ஆரம்ப வீராங்கனை சமரி அத்தப்பத்து, மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 6 சதங்களைக் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இளம் வீராங்கனை எம்மாவிடம் வீழ்ந்தார் செரீனா வில்லியம்ஸ்!

நியூயோர்க், ஓக. 19

உலகின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் இளம் வீராங்கனை எம்மா ரடுகானுவிடம் தோல்வியடைந்தார்.

அமெரிக்காவில் நடைபெறும் சின்சினாட்டி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது சுற்று ஆட்டத்தில், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், இங்கிலாந்தின் இளம் வீராங்கனை எம்மா ரடுகானுவை எதிர்கொண்டார்.

இந்நிலையில், எதிர்வரும் அமெரிக்க ஓப்பன் தொடருடன் ஓய்வு முடிவை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படும் செரீனா, பெரிதும் சவால் அளிக்காமல் 4-6, 0-6 என்ற செற் கணக்கில் தோல்வியைச் சந்தித்து ரடுகானுவின் வெற்றியை எளிதாக்கினார்.

40 வயதான செரீனாவுடன் விளையாடியது குறித்து 19 வயது ரடுகானு கூறுகையில், 'செரீனாவுடன் விளையாடி வென்றதை என்னால் நம்ப முடியவில்லை. அவருடன் களம் கண்டது அதிர்ஷ்டமாகும். இத்தனை வயது வித்தியாசத்தில் இருந்து அவரது வளர்ச்சியை கண்ட நிலையில், அவருடன் விளையாடிய அனுபவம் அருமையானது. அவர் ஒரு ஜாம்பவான்' என்றார்.

# இலங்கை அணி 4 ஆண்டுகளில் 142 போட்டிகளில் விளையாடும்!

டுபாய், ஓக. 19

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) நாடுகளுக்கு இடையிலான எதிர்கால போட்டி திட்டத்தை வெளியிட்டுள்ளது. இதன், பிரகாரம் 2023 முதல் 2027 வரையான 4 வருட சுழற்சி பருவ காலத்தில் இலங்கை அணி மொத்தமாக 142 சர்வதேச போட்டிகளில் விளையாடவுள்ளது.



2023 மார்ச் மாதத்திலிருந்து அடுத்த நான்கு வருட சுழற்சி பருவகாலத்தில் 28 டெஸ்ட் போட்டிகள், 57 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள், 57 சர்வதேச இருபது -20 கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை விளையாடவுள்ளது.

இதில், 2025 ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப், 2027 ஐ. சி. சி. உலக டெஸ்ட் 2027 உலகக் கிண்ணத்துக்கு முன்னோடியாக உலக கிண்ண சுப்பர் லீக் ஆகிய போட்டிகள் இதில் அடங்குகின்றன.

இதேவேளை, சர்வதேச கிரிக்கெட் பேரவையில் முழுமையான அங்கம் வகிக்கும் 12 நாடுகள் இந்த 4 வருடங்களைக் கொண்ட சுழற்சி பருவகாலத்தில் முன்னரைவிட அதிக எண்ணிக்கையிலான போட்டிகளில் விளையாடவுள்ளன.

இந்தக் காலப் பகுதியில் 12 நாடுகளும் மொத்தமாக 777 சர்வதேச போட்டிகளில் விளையாடும். இதில், 173 டெஸ்ட் போட்டிகள், 281 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள், 323 சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டிகள் அடங்குகின்றன. நடப்பு 4 வருட சுழற்சி பருவகாலத்தில் விளையாடப்படும் 694 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளைவிட அடுத்த பருவ காலத்துக்கான போட்டிகளின் எண்ணிக்கை அதிகமாகும்.

# தென்னாபிரிக்கா அபாரம் இங்கிலாந்து தடுமாற்றம்!



லோர்ட்ஸ், ஓக. 19

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி 6 விக்கெட் இழப்புக்கு 116 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து மூன்று டெஸ்ட் போட் டிகளில் விளையாடுகிறது தென்னாபிரிக்கா. முதல் டெஸ்ட் லண் டன் லோர்ட்ஸில் நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னா பிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. அந்த அணியின் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பந்துவீசி இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை தடுமாறச் செய்தார்கள்.

போப் மட்டும் பந்துவீச்சை நன்கு எதிர்கொண்டு ஆட்ட மிழக்காமல் 61 ஓட்டங்கள் எடுத்தார்.

மழை காரணமாக முதல் நாளன்று 32 ஓவர்கள் மட்டுமே வீச முடிந்தது. இங்கிலாந்து அணி 6 விக்கெட் இழப்புக்கு 116 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சாளர்கள் நோட்ஜே 3 விக்கெட்களும் ரபாடா 2 விக்கெட்டுகளும் யான்சென் ஒரு விக்கெட்டும் எடுத்தார்கள். (ஐ)

# ஆப்கானுடன் ரி-20 தொடர் அயர்லாந்து கைப்பற்றியது!



பெல்பாஸ்ட், ஓக. 19

இறுதி இருபது - 20 போட்டியில் 7 விக்கெட்களால் வெற்றி பெற்று ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றியது அயர்லாந்து அணி.

அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் அணி 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடியது. 4 போட்டிகளின் முடிவில் இரு அணிகளும் தலா 2 போட்டிகளில் வெற்றி பெற்றன. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி இருபது -20 போட்டி பெல்பாஸ்டில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற அயர்லாந்து முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 15 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 95 ஓட்டங்கள் எடுத்தபோது மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அதிகபட்சமாக உஸ்மான் கனி 44 ஓட்டங்கள் எடுத்தார். மழை தொடர்ந்து பெய்ததால், டக்வேர்த் லூயிஸ் முறையில் 7 ஓவர்களில் 56 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என அயர்லாந்து அணிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதையடுத்து களமிறங்கிய அயர்லாந்து அணி 6.4 ஓவரில் 3 விக்கெட்களை இழந்து 56 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன்மூலம் இருபது - 20 தொடரை 3-2 என கைப்பற்றியது.



# சிமோனா வெற்றி!

நியூயோர்க், ஓக. 19

முன்னணி வீராங்கனையான மரியா சக்காரியை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார் மற்றொரு முன்னணி வீராங்கனையான சிமோனா ஹாலெப்.

அமெரிக்காவில் நடைபெறும் சின்சினாட்டி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது சுற்று ஆட்டத்தில், கிரீஸின் மரியா சக்காரி, ருமேனியாவின் சிமோனா ஹாலெப் ஆகியோர் மோதினர்.

இதில், 6 -7 (2-7), 7 - 6 (8 -6), 1 - 6 என்ற செற்கள் கணக்கில் சிமோனா வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

# யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகம் பீடமாக உயர்வு

யாழ்ப்பாணம், ஒக. 19

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கீழ் இயங்கி வந்த இராமநாதன் நுண்கலைக் கழகம் "சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடமாக** (Sir Ponnambalam Ramanathan Faculty of Performing and Visual Arts) **தரமுயர்த்தப்பட்டுள்ளது.**

இந்த அறிவித்தல் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜெயந்தவினால் கடந்த 16ஆம் திகதி கையொப்பமிடப்பட்டு அதிசிறப்பு வர்த்தமான அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

இராமநாதன் நுண்கலைக் கழகமானது, 1960 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி முன்னாள் தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சர் சு. நடேசபிள்ளையினால், அவரது மாமனாராகிய சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது. இராமநாதன் நுண்கலைக் கழகம், இராமநாதன் கல்லூரியுடன் இணைந்ததாக சுன்னாகத்துக்கு சமீபமாக மருதனார் மடத்தில் அமைக்கப்பட்டது.

தமிழ் தொல்சீர் இசை, பரதநாட்டியம் என்பவற்றை மேம்பாடடையச் செய்தல், தமிழ் பண்பாட்டுப் பேற்றின் தனித்துவம், அடையாளம் என்பவற்றை மேம்படுத்தல் - பரவச் செய்தல் என்பவற்றினூடாகக் கற்றலுக்கான ஓர் அரணாக அமைந்திருக்க வேண்டுமென்பதே இராமநாதன் நுண்கலைக் கழகம் அமைக்கப்பட்டதன் நோக்கமாக இருந்தது.

1974ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகமாக யாழ்ப்பாண வளாகம் உருவாக்கப்பட்ட தொடக்க நிகழ்வின் போது இராமநாதன் நுண்கலைக் கழகமும் பல்கலைக்கழக முறைமைக்குள் உள்ளீர்ப்பு செய்யப்படுதல்வேண்டும் என்பதை பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், அப்போதைய கல்வி அமைச்சரும், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமாகிய கலாநிதி அல்ஹாஜ் பதியுதின் மொகமட்டும் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டனர்.

வட பிராந்தியத்தின் கலை, பண்பாடுகளைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்கும், தமிழ்மொழியை மேம்பாடடையச் செய்வதற்கும்,இந்தத் துறைகளில் ஆழமான ஆய்வை உறுதிப்படுத்துதற்குமாகவே இது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

1975 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்துடன் இராமநாதன் நுண்கலைக் கழகம் இணைக்கபட்டது. எனினும் அன்று முதல் இன்று வரை அது 'கழகமாகவே' இயங்கி வந்தது.

இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் செயற்பாடுகளை மேலோங்கச் செய்வதற்காகவும், சேவைகளை விரிவுபடுத்துவதற்காகவும் அதனை ஒரு உயர்நிலை நிறுவனமாக அல்லது பீடமாக தரமுயர்த்தவேண்டிய தேவையை உணர்ந்ததன் பின்னணியில் யாழ்.பல்கலைக்கழகம் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் சேர்ந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவந்தது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதந்துரைக்கமைவாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 16 ஆம் திகதி ஒப்பமிட்டதன் படி வெளியிடப்பட்ட 2293ஃ22 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி மூலம் "சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம் (Sri Ponnambalam Ramanathan Faculty of Performing and Visual Arts) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலின் படி, இசைத்துறை, வாத்தியத் துறை, நடனத்துறை, ஓவியத்துறை, சிற்பக்கலைத்துறை, நாடக அரங்கியல் துறை ஆகிய ஆறு துறைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. (அ)

# தேர்தல் சட்ட சீர்திருத்தம் குறித்து கலந்துரையாடல் 23 ஆம் திகதி!

கொழும்பு, ஒக. 19

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் பிரதிநிதிகளுக்கும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் வாரத்தில் இடம்பெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 23ஆம் திகதி கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்ட சீர்திருத்தங்களுக்கான பாராளுமன்ற விசேட குழு முன்மொழிந்துள்ள தேர்தல் முறை திருத்தங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

முன்னதாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தேர்தல்கள் ஆணைக்குழு இது தொடர்பில் விசேட கலந்துரையாடலை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 8 வயது சிறுவனை கால்வாயில் எறிந்த கிராம அலுவலர் கைது!

கொழும்பு, ஒக. 19

8 வயது சிறுவனை கால்வாயில் வீசிய கிராம உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொல்கஹவெல பிரதேசத்தில் குறித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் பொல்கஹவெல, உடபொல கிராம உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கால்வாய் கரையில் யானை ஒன்று நீராடிக்கொண்டிருந்ததை குறித்த சிறுவன் பார்த்துக் கொண்டிருந்துள்ளான். குடிபோதையில் அங்கு வந்த சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் சிறுவனை தூக்கிக் கால்வாயில் வீசியுள்ளமை முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கால்வாயில் வீசப்பட்ட சிறுவனுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரான 54 வயதுடைய கிராம உத்தியோகத்தர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# பெரும்போக நெல்லின் கொள்வனவு ஆரம்பம்!

கொழும்பு, ஒக. 19

நெல் சந்தைப்படுத்தல் சபையின் பங்களிப்புடன் பெரும்போக நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கிராம் நாட்டு அரிசி நெல் 120 ரூபாவுக்கும், சம்பா நெல்லை ஒரு கிலோ கிராம் 125 ரூபாவுக் கும், ஒரு கிலோ கிராம் கீரி சம்பா நெல் 130 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக 2,000 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் 30,000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

அரிசி உற்பத்தியாளர்கள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதைத் தடுப்பதற்காகவே நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லை கொள்வனவு செய்வதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதத்திற்குள் ஐந்து இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போது நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)




# மின்சார ஓட்டோ அறிமுகம்

கொழும்பு, ஒக. 19

இலங்கையின் முன்னணி ஓட்டோ விநியோகஸ்தரான தனியார் நிறுவனம் மின்சார ஓட்டோவை அறிமுகப்படுத்தியுள்ளது.

சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இதில் பங்கேற்றார். (அ)

# வட்டி வீதங்கள் மாற்றமில்லை

கொழும்பு, ஒக. 18

இலங்கை மத்திய வங்கி, கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டத்தில் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, துணைநில் வைப்பு வீதம் மற்றும் துணைநில் கடன் வீதம் என்பவற்றை முறையே 14.50%, 15.50% ஆக தொடர்ந்தும் பேண தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# மரண அறிவித்தல்

**மலர்வு**
**21 - 05 - 1937**



**உதிர்வு**
**15 - 08 - 2022**

## குமாரசாமி புண்ணியமூர்த்தி

*(இளைப்பாறிய பிரதம கணக்காய்வாளர், மாவட்ட செயலகம், மாத்தளை, கௌரவ பொருளாளர், மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்)*

நெடுந்தீவு மத்தியை (காரைவளவு) பிறப்பிடமாகவும், கொங்காவல வீதி, மாத்தளையை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி புண்ணியமூர்த்தி அவர்கள் கடந்த 15.08.2022 திங்கட்கிழமை மாத்தளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் தயாவதியின் அன்புக் கணவரும், டாக்டர் அருணா (மாவட்ட வைத்தியசாலை, மாத்தளை), சசிகலா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் ஆனந்தி (மாவட்ட வைத்தியசாலை, மன்னார்) அவர்களின் அன்பு மாமனாரும், கனிஸ்கரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற பரராஜசிங்கம், மற்றும் குணநாயகம், சொர்ணம்மா, கமலாம்பிகை (இங்கிலாந்து), லிங்கநாயகம், கோபாலகிருஷ்ணன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2022) வெள்ளிக்கிழமை மாத்தளையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப 10:00 மணியளவில் மாத்தளை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**077 315 5100**

தகவல் :
**டாக்டர் சு.சிவபாதமூர்த்தி**
(மருமகன்)

## பொருளாதார...

பெறுவதற்கும் நியாயமான வரி விதிப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் ஊழலை ஒழிப்பதற்கும், இலங்கை அரசாங்கம் தொடர்புடைய நிதி நிறுவனங்கள் மற்றும் பங்காளிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கண்காணிப்பகம் கோரியுள்ளது.

இலங்கையர்கள், உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் பிற இன்னல்களை எதிர்கொள்கிறார்கள் ஆனாலும் புதிய அரசாங்கம் அமைதியான எதிர்ப்பாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை ஒடுக்குவதில் கவனம் செலுத்துகிறது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனை விடுத்து இலங்கையின் பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் பொதுமக்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜூலை மாதம், மனித உரிமைகள் கண்காணிப்பகம் கொழும்பில் சிலரை நேர்காணல் செய்தது.

அவர்கள் 50 சதவீதத்திற்கும் அதிகமான பணவீக்கத்துடன் மற்றும் சில சமயங்களில் பெறமுடியாத சில தேவைகளுடன், குறைந்து வரும் வருமானம் காரணமாகப் போராடிக்கொண்டிருப்பதாக அவர் கூறினர்.

சிலர், தாங்கள் இரண்டு வேளை உணவை மட்டும் குறைத்துவிட்டதாகவும் மின்சாரக் கட்டணம், வாடகை போன்ற அடிப்படைச் செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்குவதாகவும் தெரிவித்தனர்.

மாதம் 45000 ரூபாய் சம்பாதிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரி தனது குடும்பம் கடனில் மூழ்கி இருப்பதாக கூறினார்.

6 மாத குழந்தையுடன் தெரு துப்புரவுப் பணியாளர் ஒருவர் ஆட்சி மாற்றம் மற்றும் ஊழலுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக போராட்டக்காரர்களுடன் இணைந்து கொண்டதாகக் கூறினார்.

குழந்தை பிறந்தபோது ஒரு சவர்க்காரம் 80 ரூபாய்!. இப்போது அது 210 ஆக உயர்ந்துள்ளதாக அந்த பணியாளர் குறிப்பிட்டதாக கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பின்வரும் அவசர நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

இதேவேளை இலங்கையின் முதன்மையான சமூகப் பாதுகாப்புத் திட்டமான சமுர்த்தி என்பது மிகக் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு ரொக்கப் பணம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

இருப்பினும் இது பயனற்றது மற்றும் ஊழல் நிறைந்ததாக உள்ளது என்றும் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## சீன கப்பலை...

ணுவ செயற்கைக் கோள்களை அம்பாந்தோட்டை வான்பரப்புக்கு அனுப் பும் பணியை அமெரிக்க பாதுகாப்பு திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே, சீனக் கப்பலின் விவகாரங்கள் குறித்து கண் காணிக்க இந்திய பெருங்கடலில் இந்தியாவின் தொழில் நுட்ப கப்பலான வீ.சி 11184 என்ற கப் பல் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனாவின் சர்ச்சைக்குரிய யுவான் வாங் 5 ஆய்வு, கண்காணிப்புக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் கடந்த 16ஆம் திகதி பிரவேசித்துள்ளது.

இந்த கப்பலின் வருகைக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும் இலங்கை அரசாங்கம் கப்பலின் வருகைக்கு அனுமதி வழங்கியிருந்தது.

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் சீனக் கப்பல் 16ஆம் திகதி முதல் 07 நாட்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த கப்பல் 11ஆம் திகதியில் இருந்து 17ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் பிரவேசிப்பதற்கு வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது.

எனினும், இந்தியாவின் பல்வேறு தரப்பினர் எதிர்ப்புகளை வெளிப்படுத்திய நிலையில் கப்பலின் வருகையை தாமதப்படுத்துமாறு வெளிவிவகார அமைச்சு சீனாவிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதனிடையே, சீன கப்பல் 5 நங்கூரமிட்டுள்ள நிலையில், இந்தியாவின் இராமேஸ்வரம் கடலில் இந்திய கடற்படையினர் ஹெலிகாப்டர் மூலம் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## நாணய...

னுடன் தொடர்புடைய உடன்படிக்கை விரைவில் கைச்சாத்தாகும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் இதன்போது நம்பிக்கை வெளியிட்டார். (அ)

## கிளிநொச்சி...

அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 525 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா ஆகியோர் இணைந்து நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் எம். என். ரணசிங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி பிரியந்த பிறேமகுமார, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்காளர் ஆர். ஏ. யூ. ரணவீர, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள், பேரவை உறுப்பினர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (அ)

## சஜித்தின்...

அத்துடன், இது தொடர்பில் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு சில சுற்றுப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளது. குறிப்பாக இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுட னும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக வும் கூறப்படுகிறது.

அரசாங்கத்தில் இணையும் இந்த குழுவில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் மாத்திரமின்றி, ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் உள்ளடங்குவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேசிய அரசாங்கம் அடுத்த சில தினங்களில் அமைக்கப்படவுள்ளதாகவும், அதில் இவர்களுக்கான அமைச்சுப் பதவிகள் பகிரப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்து கொண்டால் அந்த கட்சி பாராளுமன்றத்தில் சிறிய கட்சியாக மாற்றம் பெறும்.

இதன் காரணமாக தற்போது சஜித் பிரேமதாஸ வகித்து வரும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் எதிர்க்கட்சியில் பெரும்பான்மைப் பிரதிநிதிகளை கொண்டிருக்கும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் அணிக்கு கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (அ)

## பல்கலை....

இதன்பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

டீல் ரணில் - ராஜபக்ஷ அரசை விரட்டியடிப்போம் என்ற தொனிப்பொருளில் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்துக்கு அண்மையில் போராட்டம் நேற்று மாலை இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் அதிகளவான மாணவர்கள் பங்கேற்றிருந்தனர். அவர்கள், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை உடனடியாக இல்லாதொழியுங்கள்“, ‘மக்களின் பலத்தை உறுதிசெய்கின்ற புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை முன்னிறுத்திப் போராடுவோம்’, ‘மேலும் கடன்கள் வேண்டாம் - கொள்ளையடித்த நிதியைத் திருப்பித்தாருங்கள்’, ‘பொருட்களின் விலை - வரிச்சுமையைத் தாங்கமுடியவில்லை - வாழ்வதற்கு நிவாரணம் வழங்குங்கள்’, ‘அடக்குமுறைகளை நிறுத்துங்கள் - கைதுசெய்யப்பட்ட போராட்டக்காரர்கள் அனைவரையும் விடுதலை செய்யுங்கள்’, ‘மக்களின் வெற்றியை முன்னிறுத்தி மக்கள் கவுன்ஸிலை ஸ்தாபியுங்கள்’ எனப் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக சென்றனர்.

போராட்டம் லிப்டன் சுற்றுவட்டத்தை நெருங்க முன்னர், யூனியன் பிளேஸூக்கு அண்மையாக பொலிஸார் பேரணியை வழிமறித்து நீர்த்தாரைப் பிரயோகம் செய்தனர், தொடர்ந்து கண்ணீர் புகை வீசி தாக்கினர். இதைத் தொடர்ந்து அங்கிருந்து போராட்டக்காரர்கள் விரட்டப்பட்டனர்.

ஓடிய போராட்டக்காரர்களை துரத்திச் சென்ற பொலிஸார் அவர்களில் சிலரை பிடித்து இழுத்துச் சென்றனர். இதில் அனைத்துப் பல்கலைக்கழக ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகேயும் ஒருவர். இவ்வாறு பிடிக்கப்பட்டவர்கள் தாக்கப்பட்டனர் என்றும் தகவல்கள் வெளியாகின. எனினும், இதனை மறுத்துள்ள பொலிஸார் 12 பேரையும் தாம் கைது செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர். (ஐ)

## வீடு திரும்பினார்...

சிகிச்சை பெற்று வந்த அவர் மூன்று நாட்களுக்கு முன்னர் வீடு திரும்பிய நிலையில் தற்போது ஓய்வு எடுத்து வருகின்றார்.

சம்பந்தனுக்கு காய்ச்சல் மற்றும் சளிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## யாழ்.பல்கலைக்...

நேற்று திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நேரத்திலேயே ஆர்ப்பாட்டம் முன்னேடுக்கப்பட்டது. கட்டடமானது முழுமையாக பூரணமடையாத நிலையில், இது ஒரு அரசியல் நோக்கத்திற்காக திறந்து வைக்கப்படுவதாக தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழில்நுட்ப பீட கட்டடம் திறந்து வைக்கப்படும்போது அங்கு மாணவர்கள் சென்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கதவு பூட்டப்பட்டது. வெளியே வந்த மாணவர்கள் நிகழ்வு நடைபெறும் கட்டடத் தொகுதியின் அருகே கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மாணவர்கள் கூறுகையில்,

பல்கலைகழக வளாகத்திற்குள் அரசியல் தலையீடுகள் இடம்பெறக்கூடாது. யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கட்டடம் வேலைகள் நிறைவடையாமலே அவசர அவசரமாக திறக்கப்பட்டதை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னேடுக்கப்பட்டது எனவும் கூறினர்.

## அடுத்த...

னும் கலந்துரையாடியுள்ளபோதிலும், அது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில், அனைத்துக் கட்சிகளின் கீழ் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக அறியமுடிகின்றது.

இந்த அமைச்சரவை நியமனத்தின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வழங்கவேண்டிய மாவட்ட தலைவர்களின் பெயர்ப் பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கலாநிதி ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணதுங்க, ஜனக பண்டார தென்னக்கோன், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, சி.பி.ரத் நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, எஸ்.எம்.சந்திரசேன, நாமல் ராஜபக்ஷ, கலாநிதி பந்துல குணவர்தன, சனத் நிஷாந்த, காஞ்சன விஜேசேகர ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அறியமுடிகிறது.

புதிய அமைச்சரவையில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலர் உள்வாங்கப்பட உள்ளதாகவும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஜீவன் தொண்டமான் மற்றும் தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது.

சர்வகட்சி அரசொன்றை அமைக்க முடியாத பட்சத்தில் தேசிய அரசை அமைப்பது தொடர்பிலும் அரசாங்கம் ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது. (அ)

## 4 ஆம் திகதி...

நிகழ்வு மஹரகமவில் நடைபெறும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான பிவிதுரு ஹல உறுமய, இலங்கை கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, யுதுகம அமைப்பு, எமது மக்கள் சக்தி உட்பட மேலும் சில கட்சிகளும், தேசியவாத அமைப்புகளும் கூட்டணியில் இணைகின்றன.

கூட்டணியின் தலைவராக விமல் வீரவன்ஸ பெயரிடப்பட்டுள்ளார். உதய, வாசுவுக்கு பிரதித் தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது. (அ)

## யாழ்ப்பாணம்...

ஜயந்த நேற்று மாலை யாழ்ப்பாணம் கல்வியல் கல்லூரியில் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது யாழ். மாவட்டத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்னை தொடர்பில் அவர் கேட்டு அறிந்து கொண்டார்.

அத்துடன் எதிர்வரும் காலத்தில் யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் ஆளணிப் பற்றாக்குறை என்பவற்றை தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் தூரப்பிரதேசங்களில் கல்வி நடவடிக்கைக்கு செல்லும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைக்கு உடனடியான தீர்வினை மாகாண கல்வி பணிப்பாளர்கள் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வடமகாணக் மாகாண கல்விப் பணிப்பாளர்களின் அசமந்தப் போக்கு , இடமாற்ற கொள்கையினை சரியான முறையில் நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடிப்பு செய்தல், தற்பொழுது ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் எரிபொருள் பிரச்னை போன்றவை தொடர்பில் இதன் போது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அத்துடன் கல்வியல் கல்லூரி மாணவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கும் அமைச்சர் இதன்போது நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சரவை பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டதுடன், கடல் தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் கலந்து கருத்துக்களை முன்வைத்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்

பிறப்பு
11 - 05 - 1938



இறப்பு
14 - 08 - 2022

### திருமதி கண்மணி வடிவேலு

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட கண்மணி வடிவேலு அவர்கள் 14.08.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடா Toronto வில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்ற ஆறுமுகம், வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வடிவேலுவின் பாச மிகு மனைவியும், புவனேஸ்வரி, இன்பமலர், வசந்தி, சித்திரா, சிறிஸ்கந்தராஜா, நவீந்திரன், சிவகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,சின்ராசு, குமாரு, சுப்பையா, அன்னபூரணம், யோகம்மா, கமலா, கிட்ண சாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,வன்னியசிங் கம், இராஜேந்திரன், காலஞ்சென்ற ஜெகன்மோகன், நாகேந்திரன், அற்புதராணி, அடைக்கலமேரி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும்,ரூபி, ஜெஸ்மன், ரஜிதா, நிர்மலன், ரஜீபன், காலஞ்சென்ற நித்தியா, ரசித், நிசாந்தினி, ரமிதா, ரஞ்சீவன், கார்த்திகா, தர்ஷன், கஸ்தூரி, கௌசி, தர்சிகா, கஜன், வினோஜா, சேயோன், சஜன், அனிஷா, அபினதாப், ரஞ்சித்குமார், யூலியஸ், ராஜேந்திரன், கரன், கணேஸ், கஜீபன், கலுசேகரன், சுஜிதப்பிரியா, நிரோஜினி, தர்ஷி, கேவதி ஆகியோரின் அன்புப் பேத்தியும்,அனோஜ், ஜெனி, பியூலா, பிறிஸ் ரிலா, அஜந்த், ஜெரினா, பவிஷா, பிறிற்றி, ஏஞ்சலி, றொக்ஷன், ஷிரசன், ஸ்ரேசி, தருண், றொசான், ரிசோன், ஆருசன், விஷ்ணுதேவ் ஆகியோரின் அன்புப் பூட்டி யும் ஆவார்.

பார்வைக்கு :
Sunday, 21 Aug 2022 5:00 PM - 9:00 PM
Monday, 22 Aug 2022 10:30 AM - 11:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை :
Monday, 22 Aug 2022 11:30 AM - 1:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம் :
Monday, 22 Aug 2022 1:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

தகவல்:
**சிவா (மகன்)**

தொடர்புகளுக்கு :
**சிவா - மகன்**
Mobile : +14167329740
**சிறி - மகன்**
Mobile : +16477027950
**ரதி - மகள்**
Mobile : +14166622624
**சித்திரா - மகள்**
Mobile : +94768625574
**வசந்தி(சாந்தி) - மகள்**
Mobile : +94771401956

# அலோசியஸின் நிறுவனத்துக்கு மீண்டும் வந்த மதுபான உரிமை

*கொழும்பு, ஓக. 19*

*மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அர்ஜூன அலோசியஸுக்கு சொந்தமான டபிள்யூ. எம். மென்டிஸ் அண்ட் கோ நிறு வனத்துக்கு கலால் திணைக்களம் மீண்டும் அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளது.*

*மென்டிஸ் நிறுவனத்துக்கு முன்னர் வழங்கப்பட்ட மூன்று அனுமதி பத்திரங்களில் இரண்டு மீண்டும் வழங் கப்பட்டுள்ளதாக கலால் ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி குறிப்பிட்டார்.*

*எஞ்சிய உரிமத்தை எதிர்காலத்தில் வழங்க முடியுமா என்பது குறித்து திணைக்களம் பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*2018ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு 1.5 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வரியைச் செலுத்தத் தவறியமை காரணமாக, குறித்த நிறுவனம் வைத்திருந்த மதுபான உற்பத்தி உரிமத்தை கலால் திணைக்களம் இரத்துச் செய்தது.*

*இரத்து செய்யப்பட்ட உரிமம் குறித்து பாராளு மன்றத்தில் விவாதிக்கப்பட்டதையடுத்து, இரண்டு ஆண்டுகளுக்குள் நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தும் ஒப்பந்தத்தின் பேரில் கலால் திணைக்களத் தால் உரிமம் மீண்டும் வழங்கப்பட்டது.*

*அதே உரிமம் 01 ஜூன் 2021 அன்று மீண்டும் இரத்து செய்யப்பட்டது. இந்த அனுமதிப்பத்திரங்களை மீளப் பெறுவதற்காக கடந்த 16ஆம் திகதி சில முக்கியஸ்தர் கள் மென்டிஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் கலால் திணைக்களத்துக்கு சென்றிருந்ததாக தகவல்கள் தெரிவிக் கின்றன.* (அ)

## ஓட்டோ கட்டணம் மீண்டும் அதிகரிப்பு

*கொழும்பு, ஓக. 19*

*ஓட்டோக்களுக்கன பயண கட்டணம் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*இதன்படி, முதலாவது கிலோமீற்றருக்காக 120 ரூபா அறவிடப்படவுள்ளதாக அகில இலங்கை ஓட்டோ தொழிற்சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித் துள்ளார்.*

*இரண்டாவது கிலோமீற்றருக்காக 100 ரூபா அற விடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.* (அ)

## கொழும்பில் சுற்றித்திரியும் மான்களுக்கு வெறிநோய்!

*கொழும்பு, ஓக. 16*

*கொழும்பு - ஹோமாகம பிரதேசத்தில் சுற்றித்திரியும் மான் கூட்டத்துக்கு வெறிநோய் பரவும் அபாயம் ஏற் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சுமார் 15 மான்கள் இறந்தன என்று தெரிவிக்கப் பட்டதையடுத்து, சுகாதார அதிகாரிகள் ஏற்கனவே இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சுகா தார அமைச்சின் பொது சுகாதாரம் மற்றும் கால்நடை சேவைகள் பணிப்பாளர் எல். டி. கித்சிறி தெரிவித்துள்ளார்.*

*உயிரிழந்த மான்களில் 2 மான்களுக்கு வெறிநோய் தாக்கியுள்ளதாக பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. இருப்பினும், பீதி அடையத் தேவையில்லை என மருத்துவர் எல்.டி.கித்சிறி தெரிவித்துள்ளார்.*

*நாய்களைத் தவிர, கீரிகள் மற்றும் மரநாய் போன்ற விலங்குகளாலும் வெறிநோய் பரவும் அபாயமுள்ளது. எவ்வாறாயினும், மான்கள் தங்கள் நிலத்திலும் தோட் டங்களிலும் மேய்ந்து கொண்டிருந்தால், விலங்குகளின் உமிழ்நீரைப் பற்றி கவனமாக இருக்குமாறு அவர் பொதுமக்களை எச்சரித்துள்ளார்.*

*குறித்த பகுதியில் உள்ள நாய்களுக்கு தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.* (ஐ)

## 21 மடிக்கணினிகளை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது!

*கொழும்பு, ஓக. 19*

*21 மடிக்கணினிகளை திருடிச் சென்ற சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*ராகம பிரதேசத்தைச் சேர்ந்த 26 மற்றும் 32 வயது டைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*வத்தளை பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் நிறு வனமொன்றின் களஞ்சியசாலையில் கடந்த மே மாதம் 17ஆம் திகதி மடிக்கணினிகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப் பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசார ணைகளின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர்.*

*சந்தேகநபர்கள் இருவரில் ஒருவர் ஒரே நிறுவனத்தில் பணிபுரிபவர் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த கணினிகளை அவர் பல சந்தர்ப்பங்களில் திருடி யுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.*

*கைது செய்யப்பட்ட மற்றைய சந்தேகநபர் பணத் திற்காக மடிக்கணினிகளை விற்பனை செய்யும் தொழி லில் ஈடுபட்டுள்ளார். விசாரணையின்போது திருடப் பட்ட 13 மடிக்கணினிகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.*

*சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முன்னி லைப்படுத்தியதன் பின்னர் பிரதான சந்தேகநபர் எதிர் வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.*

*மற்றைய சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் வத்தளை பொலி ஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.*(அ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
04 - 11 - 1931



இறப்பு
15 - 08 - 2022

### திருமதி அன்னம்மா தருமதுரை

யாழ். முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாக வும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னம்மா தருமதுரை கடந்த 15.08.2022 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் – சின்னாச்சிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் – பார்வதியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அரு ளம்பலம் தருமதுரை அவர்களின் அன்பு மனைவியும், சந்திரலீலா, காலஞ்சென்ற இந்திரலீலா, புஸ்பலீலா, வசந்தலீலா, இராசாக்கிருஷ்ணன், காலஞ்சென்ற அசோக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்றவர்களான கண்ணாத்தைபிள்ளை, நட ராசா, நல்லபிள்ளை, இராமசேது, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகரட்னம், விக்னேஸ்வரராஜா, சிறிஸ்கந்தராஜா, ராஜலஷ்மி ஆகியோரின் அன்பு மாமி யாரும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, கன காம்பிகை, தம்பிராசா, சதாசிவம், நவரத்தினம், நாகேஸ் வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகம்மா, தவமணி ஆகியோரின் அன்புச் சகலியும், கஜந்தன், செந்தூரன், அபிராமி, தணி காஷ், தெவின், கஸ்தூரி, துர்சிகா, சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், சஞ்ஜனா அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 20 Aug 2022 5:00 PM - 9:00 PM
Sunday, 21 Aug 2022 2:00 PM - 3:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Sunday, 21 Aug 2022 3:00 PM - 5:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம் :
Sunday, 21 Aug 2022 5:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

தகவல் :
**வசந்தலீலா (மகள்),**
**சிறிஸ்கந்தராசா (மருமகன்)**

தொடர்புகளுக்கு :
**077 283 3627**

இல. 41/15, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*